விலை: 60.00
பக்கங்கள் : 24
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

# வலம்புரி
## சங்குநாதம்




சங்கு 23
ஒலி 196 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 19 ஞாயிற்றுக்கிழமை (03.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### யாழில் ஐஓசி எரிபொருள் நிரப்பு நிலையம் முன்
# ஏ-9 வீதியை மறித்து பொதுமக்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டச் செயலகத்திற்கு அருகாமையில் உள்ள லங்கா ஐஓசி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிறைவடைந்து விட்டதாக விநியோகத்தை மேற்கொண்ட இராணுவத்தினர் தெரிவித்ததையடுத்து பொதுமக்கள் வீதியை மறித்து நேற்று மாலை 6 மணியளவில் போராட்டத்தில் ஈடுபட்டனர். 23




### படிக்கட்டில் ஏறும்போது
# கால் தடக்கி விழுந்த இளம் குடும்பஸ்தர் பலி



(யாழ்ப்பாணம்)

படிக்கட்டில் ஏறும்போது கால் தடக்கி விழுந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பளை இயக்கச்சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முகாமையாளராகக் கடமையாற்றி வந்த 23

# லிட்ரோ எரிவாயு
### அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே விநியோகம்

(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டும் எரிவாயு விநியோகம் தொடரும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு இம்மாதம் 33,000 மெற்றிக் தொன் எரிவாயு இறக்குமதி செய்ய 23

### சங்கானையில்
# வர்த்தக நிலையத்தில் தீ விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சங்கானையில் உள்ள வர்த்தக நிலையத் தில் 23

### எரிபொருள் நெருக்கடி
# பொலிஸாருக்கு சைக்கிள்

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக 4000 சைக்கிள்களை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு 23

### கோட்டா - ரணில் அரசை வெளியேற்ற
# சுனாமி அலை போன்று முன்னோக்கி வருவோம்
## ஜே.வி.பி தலைவர் அநுரகுமார



(கொழும்பு)

கோட்டா - ரணில் அரசாங்கத்தை வெளியேற்ற சுனாமி அலை போன்று முன்னோக்கி வருவோம் என ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(23 ஆம் பக்கம் பார்க்க)

### எதிர்வரும் இரு வாரங்கள்
# அலுவலக பஸ் சேவையை முன்னெடுக்க தீர்மானம்
### தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு வாரங்களில் அலுவலக பஸ் சேவைகளை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் 23

# நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கை மக்களுக்கு உதவுவோம்
### அமெரிக்க இராஜாங்க செயலாளர் மீண்டும் உறுதி

(வொஷிங்டன்)

நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கை மக்களுக்கு தொடர்ந்து உதவுவோம் என அமெரிக்க இராஜாங்க செயலாளர் மீண்டும் உறுதியளித்துள்ளார்.

அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் 23



# அம்புலன்ஸ், மருத்துவர்களுக்கு இராணுவ முகாம்களில் எரிபொருள்
### அமைதியின்மையையடுத்து மாற்று நடவடிக்கை

(கொழும்பு)

அம்புலன்ஸ், தனியார் பஸ்கள், மருத்துவர்கள், அத்தியாவசிய உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லும் லொறிகளுக்கு இராணுவ முகாம்களில் இருந்து எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை வழங்குவதனால் ஏற்படும் அமைதியின்மையை அடு 23

# விரைவில் மக்கள் புரட்சி வெடிக்கும்
### அபாய எச்சரிக்கை விடுப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக மக்கள் தொடர்ச்சியாக அரசாங்கத்திற்கு எதிராக போராடி வருகின் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கியமான சீர்திருத்தங்களை இலங்கை மேற்கொள்ளாவிட்டால்

## கட்டுப்படுத்த முடியாத கடனைச் சந்திக்க நேரிடும் அமெரிக்க செனட் சபை தெரிவிப்பு

(கொழும்பு)

சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படாவிட்டால், இலங்கை மேலும் பொருளாதார முறைகேடு மற்றும் கட்டுப்படுத்த முடியாத கடனை சந்திக்க நேரிடும் என அமெரிக்க செனட் சபையின் வெளிநாட்டு உறவுகள் குழு தெரிவித்துள்ளது.

இலங்கையுடனான எந்தவொரு சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தமும் மத்திய வங்கியின் சுதந்திரம், வலுவான ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை மேம்படுத்துதல் ஆகியவற்றில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை செனட் குழு தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளது.

இந்த முக்கியமான சீர்திருத்தங்கள் இல்லாவிட்டால், இலங்கை மேலும் பொருளாதார தவறான மேலாண்மை மற்றும் கட்டுப்பாடற்ற கடனை சந்திக்க நேரிடும் என்றும் அது மேலும் கூறியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் டுவிட்டிற்கு செனட் குழு பதிலளித்துள்ளது.

IMF தனது புதிய திட்டத்தின் நோக்கம் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதாகும் என்று கூறியுள்ளது.

மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாப்பது, நிதி ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பது மற்றும் ஊழல் பாதிப்புகளை நிவர்த்தி செய்வதற்கான சீர்திருத்தங்களை முடுக்கிவிடுவது, இலங்கை அதன் முழுத் திறனையும் பூர்த்தி செய்தல் என்பன இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் என்றும் அது மேலும் கூறியுள்ளது.

கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, பேராசிரியர் சாந்தா தேவராஜன் மற்றும் கலாநிதி ஷர்மினி குரே ஆகியோருடன் கலந்துரையாடியதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

ஜூம் ஊடான விவாதங்களில், IMF நடைமுறைகளின் எதிர்காலம் மற்றும் நாடு எதிர்கொள்ளும் சவால்களை சமாளிக்கும் முறைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. (ம-7)

# திருமணப் பதிவுகள் 85 சதவீதத்தால் குறைவு

(கொழும்பு)

கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் திருமண பதிவுகளின் எண்ணிக்கை 85 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

அகில இலங்கை திருமணம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் சுசந்த ஹேமசிறி ரணசிங்க இதனைக்குறிப்பிட்டார்.

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த மாதம் திருமண மாதமாக காணப்படுகின்ற போதிலும் கடந்த காலங்களைவிட திருமண மண்டபங்களுக்கான முன் பதிவுகள் குறைவாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## பிரத்தியேக வகுப்புக்கள்

தரம் 06 - 11 வரையான மாணவர்களுக்கான
வரலாறு, புவியியல்
தரம் 10 - 11 மாணவர்களுக்கான
வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும்
குழு மற்றும் தனி வகுப்புக்கள் நடைபெறும்.
(12053)

தொடர்புகளுக்கு
077 283 3632


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை முன்னாள் ஆசிரியர் திருமதி கேமமாலினி கணேசலிங்கம் அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி இராமலிங்கம் நல்லம்மா**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சக ஆசிரியர்கள்
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

(C-4573)


## பத்திரிகை விநியோகம்

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் துவிச்சக்கர வண்டிகள் மூலம் பத்திரிகை விநியோகம் செய்வதற்கு ஆட்கள் தேவை.
(பகுதிநேர வேலை)

- யாழ்ப்பாணத்தை அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- பொருத்தமானவர்கள் நேரில் வரவும்.

மேலதிக விபரங்களுக்கு
076 097 3121

இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். | பொது முகாமையாளர் வலம்புரி


# யாழ் குடா விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)

எமது சங்கத்தின் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்**
- வயதெல்லை
- 18 - 45 (கூட்டுறவு பணியாளர்களுக்கு வயது எல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது)
- சம்பளத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபத்திற்கு அமைய வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| 01. பதவி | : | பண்ணை முகாமையாளர் |
| 02. வெற்றிடம் | : | 01 |
| 03. சம்பளக் குறியீடு | : | 115/10 |
| 04. சம்பள அளவுத்திட்டம் | : | 17605 - 198 X 10 - 220 X 10 - 21785 (04/2018இன் படி) |

**கல்வித் தகைமை**

அ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் விவசாய விஞ்ஞானத்திலான பட்டதாரி/ அதற்குச் சமமான தகைமை

அல்லது

ஆ. குண்டகசாலை விவசாயக் கல்லூரியின் /அதற்குச் சமமான வேறேதேனும் அங்கீகரிக்கப்பட்ட விவசாயக் கல்லூரியின் விவசாய டிப்ளோமா கற்கைநெறியிலான சான்றிதழ்

அல்லது

இ. க.பொ.த உயர்தர சித்தியுடன் விவசாயம் சம்பந்தமான 03 மாதங்களிற்கு குறையாத பயிற்சிச் சான்றிதழ் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட விவசாய நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 8 வருடகால விவசாய/விதை உற்பத்தி துறையிலான தொழில்சார் அனுபவம்.

| | | |
|---|---|---|
| 01. பதவி | : | அலுவலக உதவியாளர் |
| 02. வெற்றிடம் | : | 01 |
| 03. சம்பளக் குறியீடு | : | 317/16 |
| 04. சம்பள அளவுத்திட்டம் | : | 15135 - 120 X 10 - 135 X 10 - 17685 (04/2018இன் படி) |

**கல்வித் தகைமை**
- கூட்டுறவுப் பணியாளர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவம்

அல்லது

- கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப் பத்திரம் / 8ஆம் தர கல்விச் சான்றிதழ்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பத்தினை சுயமாக தயாரித்து கல்வித் தகைமை சான்றிதழ்களின் பிரதியுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு தலைவர், யாழ் குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம், பலாலி வீதி, திரு நெல்வேலி வடக்கு எனும் முகவரிக்கு 15.07.2022ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்
யாழ் குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) (C-4571)


## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்** (12052)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



**அமரர் சின்னவன் பரமசிவம்**

கடந்த 03.06.2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் சின்னவன் பரமசிவம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது.

வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (03.07.2022) ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்)

புத்தூர் வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
உண்டியல் பெட்டியடி.

(C-4570)

இங்ஙனம்: குடும்பத்தினர்
தொ.பே:- 077 422 9098

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனஅழுத்தம் ஏற்படாதவாறு

## சிறுவர்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

**(கொழும்பு)**

**நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில், சிறுவர்கள் எதிர்நோக்கும் உளவியல் ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மற்றும் பேருந்து கட்டண அதிகரிப்புக்கு மத்தியில் மாணவர்கள் பாடசாலைக்கு சென்று தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த நிலையில் மன அழுத்தம் ஏற்படாமல் சிறுவர்களைப் பாதுகாக்க பெற்றோர் உட்பட சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடக குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்னசிங்கம் தெரிவித்தார். (நி-6)

# 3 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கும் ஜப்பான்

(கொழும்பு)

இலங்கை மக்களுக்கு மருந்து மற்றும் உணவுத் தேவைகளை வழங்குவதற்காக யுனிசெப் மற்றும் உலக உணவு திட்டம் ஆகியவற்றின் மூலம் 3 மில்லியன்அமெரிக்க டொலர்களை அவசர உதவியாக வழங்க ஜப்பான் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இலங்கையில் உள்ள ஜப்பானிய தூதரகம் நேற்று வெளியிட்ட அறிக்கையின் ஊடாக, இலங்கையின் பொருளாதார நிலைமை தொடர்பில் அதன் நிலைப்பாடு குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிதியுதவி இலங்கை மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களை போக்க உதவியாக இருக்கும் என நம்புவதாக ஜப்பான் தெரிவித்துள்ளது. (நி-6)

# அதிகரிக்கும் சைக்கிள் திருட்டுக்கள்

(கொழும்பு)

துவிச்சக்கரவண்டி திருட்டுச் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து காணப்படுவதால் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் தெரிவித்தனர். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் மத்தியில் தற்போது துவிச்சக்கரவண்டியின் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது.

குறிப்பாக பாதை ஓரங்கள், பொது இடங்கள் மற்றும் வியாபார நிலையங்களில் நிறுத்தி வைக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளை அதன் உரிமையாளர்கள் பாதுகாப்பான முறையில் வைக்குமாறும் பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களில் துவிச்சக்கரவண்டி திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுவதாக பொலிஸ் நிலையத்தில் அதிகமான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (நி-6)

# மின் உற்பத்திக்கு தேவையான உலை எண்ணெய் பற்றாக்குறை

(கொழும்பு)

தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு மத்தியில், மின் உற்பத்தி நிலையங்களுக்கு அவசியமான உலை எண்ணெய் குறைவடைந்து செல்வதாக மின்சார பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்தின் ஒன்றிணைந்த வலயத்தில், நாளொன்றுக்கு அவசியமான எரிபொருள் மாத்திரமே கையிருப்பில் உள்ளதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

சப்புகஸ்கந்த மின் உற்பத்தி நிலையத்தின் 2 மின் பிறப்பாக்கிகளுக்கும், 4 நாட்களுக்கு மாத்திரமே உலை எண்ணெய் போதுமானதாக உள்ளது.

அத்துடன், மேற்கு முனைய மின் உற்பத்தி நிலையத்துக்கு 2 நாட்களுக்கு அவசியமான உலை எண்ணெய்யே கையிருப்பில் உள்ளதாக மின்சார பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், அவற்றுக்காக உலை எண்ணெய்யைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# பணிக்கு திரும்புமாறு

## தபால் ஊழியர்களுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள தபால் ஊழியர்கள் உடனடியாக பணிக்கு சமுகமளிக்காவிட்டால், அவர்கள் பதவியை விட்டு வெளியேறியதாக கருதப்படுவர்.

பணிப்பகிஷ்கரிப்பை கைவிட்டு உடனடியாக பணிக்கு திரும்புமாறு தபால் ஊழியர்களுக்கு தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலை காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து தபால் நிலையங்களும் உப தபால் நிலையங்களும் வாரத்தில் மூன்று நாட்கள் மாத்திரம் இயங்கும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த ஜூன் 26 ஆம் திகதி முதல் தபால் ஊழியர்கள் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# எரிபொருட்களுடன் இலங்கை வரவுள்ள கப்பல்கள்

## ஐ.ஓ.சி.அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டிற்கு டீசல் மற்றும் பெற்றோலை ஏற்றிய மூன்று கப்பல்கள் வருகை தரவுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஒரு கப்பல் இம் மாதம் 13 - 15 ஆம் திகதிகளுக்கிடையிலும் மற்றுமொரு கப்பல் 29 - 31 ஆம் திகதிகளுக்கிடையிலும் அடுத்த கப்பல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 - 15 ஆம் திகதிகளுக்கு இடையிலும் நாட்டை வந்தடையும் என லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-6)

# 90 வீதமான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நாட்டில் செயலிழப்பு

(கொழும்பு)

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக 90 வீதமான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் செயலிழந்துள்ளதாக அகில இலங்கை எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோரப்படும் எரிபொருள் உரிய முறையில் கிடைப்பதில்லை என்பதால், இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் டப்ளியூ.எஸ்.பெர்னாண்டோ தெரிவித்தார். (நி-6)

# ஜனாதிபதி உடனடியாக பதவி விலக வேண்டும்

## மொட்டு எம்.பி.வலியுறுத்து



(கொழும்ப)

"நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமையைக் கருத்தில்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாகப் பதவி விலக வேண்டும்" என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தோல்வி அடைந்துவிட்டார். தன்னால் முடியாது என்பதை முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் நிரூபித்துவிட்டார். எனவே, இதனை விளையாட்டாகக் கருதக்கூடாது.

ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலகி சர்வகட்சி இடைக்கால அரசை அமைப்பதற்கு இடமளிக்க வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி-6)

# மீண்டும் அதிகரிக்கப்படும் எரிவாயு விலை

(கொழும்ப)

சமையல் எரிவாயு கொள்கலனின் விலையை மேலும் அதிகரிக்க லிட்ரோ நிறுவனம் தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலனின் விலையை சிறு அளவில் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சிலிண்டர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், 200 அல்லது அதனை அண்மித்த தொகையினால் விலையை அதிகரிப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதன்படி, கொள்கலன் ஒன்றின் விலையை 5100 அல்லது அதனை அண்மித்த தொகையில் விற்பனை செய்ய தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

லிட்ரோ 12.5 கிலோகிராம் எடையுடைய கொள்கலன் ஒன்றின் விலை தற்போது 4860 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலைப்பந்தாட்ட போட்டி

# தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இரு பிரிவிலும் சம்பியன்



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் இரு பிரிவுகளில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.


இதன் இறுதியாட்டங்கள் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

16 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது.

ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 12:5 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. 3 ஆம் இடத்தை அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியினர் பெற்றனர்.

20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. இரு அணிகளும் சமபலத்துடன் தமது பலப்பரீட்சையை தொடர்ந்தனர். ஆட்டநேர முடிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 23:22 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டது. 3 ஆம் இடத்தை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியினர் பெற்றனர். (4-90)

# விம்பிள்டன் டென்னிஸ் ஜோகோவிச் முன்னேற்றம்




கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் லண்டனில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 3 ஆவது சுற்று ஆட்டத்தில் உலகின் முன்னணி வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், சக வீரர் கெக்மனோவிச்சுடன் மோதினார்.

இதில் 6-0, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்ற ஜோகோவிச் 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு சுற்றில் இத்தாலி வீரர் ஜானிக் சின்னர், அமெரிக்காவின் ஜான் இஸ்னருடன் மோதினார். இதில் 6-4, 7-6, 6-3 என்ற செட் கணக்கில் வீழ்த்தி 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினார் சின்னர். (4)

# வேகப்பந்து வீரர் கப்டனாக பணியாற்றுவது எளிது அல்ல

## ராகுல் டிராவிட் தெரிவிப்பு



இங்கிலாந்துக்கு எதிராக நேற்று முன்தினம் தொடங்கிய 5 ஆவது டெஸ்டில் இந்திய அணிக்கு கப்டனாக வேகப்பந்து வீரர் பும்ரா பணியாற்றினார். ரோகித் சர்மா கொரோனாவால் பாதிக்கப்பட்டதால் அவருக்கு இந்த அதிஷ்டம் கிடைத்தது.


கபில்தேவுக்கு பிறகு கப்டன் பொறுப்பை வகித்த வேகப்பந்து வீரர் என்ற பெருமையை பும்ரா பெற்றார்.

இந்த நிலையில் வேகப்பந்து வீரரான பும்ரா கப்டனாக பணியாற்றுவது எளிது அல்ல என்று பயிற்சியாளர் ராகுல் டிராவிட் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, பும்ரா எப்போதும் தனது பந்து வீச்சில் கவனமாக இருப்பார்.

ஆட்டத்தின் போக்கை கணிப்பதில் வல்லவர். ஆட்டத்தின் தன்மைக்கு ஏற்றவாறு திறமையுடன் பந்து வீசக்கூடியவர். பும்ரா இதுவரை கப்டனாக இருந்தது இல்லை.

இதனால் புதிய பொறுப்பு அவருக்கு சவாலானதாக இருக்கும். ஆனாலும் நாங்கள் அவருக்கு எங்களது ஆதரவை தொடர்ந்து அளிப்போம். ஒரு வேகப்பந்து வீச்சாளர் கப்டனாக செயற்படுவது சாதாரணமான காரியம் அல்ல. தனது பந்து வீச்சிலும் கவனம் செலுத்த வேண்டும். கப்டனாக இருப்பதை காட்டிலும் பும்ரா ஒரு பந்து வீச்சாளராக எங்களுக்கு அதிகம் தேவை என தெரிவித்தார். (4)

# டோனியின் சாதனையை முறியடித்த பண்ட்




இங்கிலாந்துக்கு எதிரான 5 ஆவது டெஸ்ட் போட்டியில் சதம் விளாசியதன் மூலம் டோனி யின் சாதனையை பண்ட் முறியடித்துள்ளார்.

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான கடைசி டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் நேற்று முன்தினம் தொடங்கியது. முதலில் துடுப்பாட்டம் தொடங்கிய இந்திய அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 338 ஓட்டங்கள் குவித்துள்ளது.

புஜாரா, கோலி போன்ற அனுபவ வீரர்கள் சொதப்பிய நிலையில், இளம் வீரர் ரிஷப் பண்ட் அதிரடியாக 89 பந்துகளில் சதம் விளாசினார். இது அவருக்கு 5 ஆவது டெஸ்ட் சதம் ஆகும்.

இந்த சதத்தின் மூலம் அவர் டோனியின் 17 ஆண்டு கால சாதனையை முறியடித்துள்ளார். கடந்த 2005 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில், இந்திய வீரர் டோனி 93 பந்துகளில் சதம் விளாசி டெஸ்டில் அதிவேகமாக சதமடித்த இந்திய விக்கெட் கீப்பர் என்ற சாதனையை படைத்திருந்தார். (4)

# இந்தியாவிற்கு எதிரான இருபது - 20 இங்கிலாந்து அணி அறிவிப்பு




இந்திய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. ஒத்திவைக்கப்பட்ட கடைசி டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் தொடங்கியது. முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 7 விக்கெட் இழந்து 338 ரன்கள் எடுத்துள்ளது. டெஸ்ட் போட்டி முடிந்த பிறகு இருபது-20, ஒருநாள் போட்டியிலும் விளையாடவுள்ளது.

இந்திய அணிக்கு எதிராக இருபது-20, ஒருநாள் போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

மோர்கன் ஓய்வு அறிவித்த நிலையில் இங்கிலாந்து அணியின் புதிய கப்டனாக பட்லர் பதவியேற்றுள்ளார். ஒருநாள் போட்டிக்கான அணியில் ஜோரூட், பென் ஸ்டோக்ஸ் இடம் பெற்றுள்ளனர். இருபது-20 அணியில் பேர்ஸ்டோவ் இடம் பெறவில்லை.

இருபது- 20 போட்டிக்கான இங்கிலாந்து அணி வீரர்கள் விபரம்: ஜோஸ் பட்லர் (கப்டன்), மொயீன் அலி, ஹாரி புரூக், சாம் குர்ரன், ரிச்சர்ட் க்ளீசன், கிறிஸ் ஜோர்டன், லிவிங்ஸ்டன், டேவிட் மலான், டைமல் மில்ஸ், மேத்யூ பார்கின்சன், ஜேசன் ராய், பில் சால்ட், ரீஸ் டாப்லி, டேவிட் வில்லி

ஒருநாள் போட்டிக்கான வீரர்கள் விபரம்:- பட்லர் (கப்டன்), மொயீன் அலி, ஜானி பேர்ஸ்டோவ், ஹாரி புரூக், பிரைடன் கார்ஸ், சாம் கர்ரன், லிவிங்ஸ்டன், கிரேக் ஓவர்டன், மேத்யூ பார்கின்சன், ஜோ ரூட், ஜேசன் ராய், பில் சால்ட், பென் ஸ்டோக்ஸ், ரீஸ் டாப்லி, டேவிட் வில்லி. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டா, ரணில் ஆகியோர் பதவி விலகக்கோரி போராட்டம்



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பதவி விலகக்கோரி நேற்று குருநாகலில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் தம்முடன் இப்போராட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு இளைஞர்களுக்கு அறிவிப்பும் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# முற்றாக முடங்குகிறது நாடு

(கொழும்பு)

**எதிர்வரும் வாரத்தில் இருந்து நாடு முழுமையாக முடங்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

பொதுப் போக்குவரத்துச் சேவைப் பேருந்துகள் மட்டுமன்றி சுகாதாரக் கல்வி போன்ற அத்தியாவசிய சேவைகளையும் பராமரிக்க முடியாத அளவுக்கு எரிபொருள் நெருக்கடி மோசமடைந்துள்ளது.

அத்தியாவசிய சேவைகளை கூட பராமரிக்க முடியாத அளவுக்கு எரிபொருள் நெருக்கடி நாட்டை பாதித்துள்ளதாகவும், ஒரு தொகை எரிபொருள் இறக்குமதி செய்யப்படும் வரை இந்நிலை தொடரும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

# தற்போதைய நெருக்கடி நிலைக்கு ஆட்சியாளர்கள் மட்டுமே காரணம்

## பாராளுமன்ற உறுப்பினர் ரத்னதேரர்

(கொழும்பு)

தற்போது நாடு எதிர்நோக்கி உள்ள நெருக்கடி ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட ஒன்று என பாராளுமன்ற உறுப்பினர் ரத்ன தேரர் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து கூறுகையில், ஜனாதிபதியும் அமைச்சர்களும் பதவியில் இருக்க தகுதி அற்றவர்கள். பைத்தியக்காரத்தனத்தை நிறுத்தி விட்டு இவர்கள் வீடு செல்ல வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-6)

# விற்பனைக்கு

- யாழ்.வைமன் வீதியில் 6 பரப்பு காணியும்.
- யாழ்.கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 3 பரப்பு காணியும்.
- யாழ்.செட்டித் தெருவில் 2 1/2 பரப்பு காணியும்.
- யாழ்.றக்கா வீதியில் 2 பரப்புடன் காணியும் வீடும்.
- யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 10 பரப்பு காணியும் 5 1/2 பரப்பு காணியும் வீடும்.
- யாழ்.கந்தப்ப சேகரம் வீதியில் 10 பரப்பு காணியும்.
- யாழ்.பிறவுண் வீதியில் 4 1/2 பரப்பும் வீடும் 2 1/2 பரப்பும் வீடும்.
- யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் 16 அடி அகலமும் 216 நீளமும் கொண்ட தனிக்கடையும்.
- யாழ்.பஸ் தரிப்பிடத்துக்கு பின்னால் மின்சார நிலைய வீதியில் 30 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடி கடையும்.
- யாழ்.பலாலி வீதியில் தபால் பெட்டி ஒழுங்கையில் 3 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு - 077 723 2535** (12049)

# 31ம் நாள் நினைவலைகள்



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி. தாரணி தினேஷ்
அவர்களின் பாசமிகு தந்தையார்
அமரர்.
**சின்னையா தங்கராஜா**
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்து
கொள்வதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கிறோம்.

(12044)

**பாடசாலை சமூகம்**
**யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை**

# இராசிபலன்

03.07.2022
ஆனி 19, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 3.01 மணிவரை

மகம் முழுவதும்
சுபநேரம் 8.57-10.27 மணிவரை
இராகுகாலம் 4.27-5.57 மணிவரை

மாணிக்கவாசகர் குருபூசை, சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம் - உத்தராடம்

**வளவன்**




சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வழிபாடு திருப்தி தரும், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.




புதிய பொருட்சேர்க்கையுண்டு, உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.




முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.




தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும், விருந்தினர் வருகையுண்டு, பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.




ஆரோக்கியத்தில் கவனம் தேவை, விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு.




சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், பயணங்களால் பலனுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாழ்க்கைத்துணை வழியே மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், மனதில் தேவையற்ற சஞ்சலங்கள் தோன்றி மறையும்.




குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள்.




உடல் நலனின் இருந்த பாதிப்புக்கள் அகலும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள்.

உன் அறிவு அழுகுற அதைக் கூர்மைப்படுத்திக்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் உத்தியோகத்தரின் சின்னம் பொறிக்கப்பட்ட வாகனங்களுக்கே எரிபொருள்

## பொதுமக்கள் கோரிக்கை

(கரணவாய்)

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் வழங்குவதாயின் அவர்களின் சின்னம் பொறிக்கப்பட்ட வாகனங்களுக்கே எரிபொருள் நிரப்பப்படுதல் வேண்டும் என வடமராட்சி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் பலர் பல நாட்களாக காத்திருந்து எரிபொருளைப் பெற்று வருகின்றனர். இந் நிலையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலர் தமது நண்பர்களின் மோட்டார் சைக்கிள்களுக்கு எரிபொருள் நிரப்பி உதவி புரிவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனால் குறித்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் மோட்டார் சைக்கிள்களுக்கு குறித்த அரச சின்னம் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர் ஒட்டப்பட்ட வாகனங்களுக்கே எரிபொருள் வழங்குமாறு மக்கள் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் வழங்கப்படும் போதே பல குழப்ப நிலைகள் உருவாகி வருகிறது. இந் நிலையில் பொலிஸ் உத்தியோகத்தர் நாளுக்கு நாள் வெவ்வேறு மோட்டார் சைக்கிள்களில் வந்து எரிபொருள் நிரப்பிச் செல்வதாகவும் மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (4-60)

# நாவலரின் கஞ்சித் தொட்டி தர்மம்

## கோப்பாயில் மீளவும் ஆரம்பம்



(குப்பிழான்)

கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் வெள்ளிக் கிழமை கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு கஞ்சி வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வை கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்ட முதல்வர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் கலந்து கொண்டு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

மேற்படி பாடசாலையில் வெள்ளிக்கிழமை தோறும் இப் பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட உள்ளது.

எதிர்கால த்தில் நாவலர் பாடசாலை பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் இத் திட்டத்தில் இணையும் பட்சத்தில் தினசரி மாணவர்களுக்கு கஞ்சி வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும் என மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டு கோப்பாய் சுப்பிர முனிய கோட்ட முதல்வர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் தெரிவித்தார். இத் திட்டம் எதிர்கால த்தில் ஏனைய பாடசாலைகளிலும் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-6-18)

# அளவெட்டி பெருமாக்கடவை சித்தி விநாயகர் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி பெருமாக்கடவை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய சுபகிருது வருஷ வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ள இவ் ஆலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு சப்பரத்திருவிழாவும், அடுத்த நாள் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் 13 ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்றைய தினம் கொடியிறக்க உற்சவமும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு பூங்காவன திரு விழாவும் நடைபெறும் என ஆலய தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது. (4)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியானது 44 ஆவது ஆண்டில் காலடி வைப்பதையொட்டி அக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுக்கூட்டமானது "நெருக்கடிகளை எதிர்கொள்ள உழைக்கும் மக்களே ஒன்றிணைவீர்" என்ற அழைப்புடன் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் புத்தூர் மேற்கு கலைமதி மக்கள் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (4-8)

# நெல் மூடையுடன் வந்த 9 பவுண் நகை

(சாவகச்சேரி)

தென்மராட்சி - எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியைச் சேர்ந்த அரைக்கும் ஆலை உரிமையாளர் ஒருவர் தனது மில்லுக்கு நெல் மூடையுடன் தவறுதலாக வந்த 9 பவுண் நகையினை உரியவரிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் 8 நெல் மூடைகளை அரிசி ஆக்குவதற்காக அப்பகுதியில் உள்ள அரைக்கும் ஆலை ஒன்றிற்கு கொடுத்துள்ளார். குறித்த நெல் மூடைகளை ஒவ்வொன்றாக இயந்திரத்தில் போட்டு நெல் உடைத்த போது இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டிருந்தது.

அதனை அவதானித்த போது இயந்திரத்தில் தாலிக் கொடி,சங்கிலி உள்ளிட்ட தங்க ஆபரணங்கள் சிக்கியிருந்தமை கண்டறியப்பட்டிருந்தது. இந்நிலையில் உடனடியாக இவ் விடயம் தொடர்பாக நெல் மூடை கொண்டு வந்தவருக்கு தகவல் தெரிவித்த மில் உரிமையாளர் 9பவுண் எடை கொண்ட ஆபரணங்களை உரியவரிமே ஒப்படைத்தார். (4-6-30)

# தமிழ்த்தேசிய பண்பாட்டு பேரவையால் யாழில் கையெழுத்துப் போராட்டம்



(அராலி)

"பட்டினிச் சாவில் இருந்து மக்களை காப்பீர்" என்ற தொனிப்பொருளில் மாபெரும் கையெழுத்துப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப்போராட்டமானது தமிழ்த்தேசிய பண்பாட்டு பேரவையினால் யாழ்.பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் முன்னெடுக்கப்பட்டது.

பதுக்கல் மற்றும் கொள்ளை இலாபங்களில் இருந்து மக்களைப் பாதுகாக்க கட்டுப்பாட்டு விலைகளை நடைமுறைப் படுத்தி இறுக்கமாகச் செயற்பட வேண்டும்.

மருந்து, மருத்துவப் பொருட்கள் ஆகியவற்றின் மீதான விலையைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுத்தல் மற்றும் மாவட்ட அரச பொது மருத்துவமனைகளுக்கு தடையின்றி மருந்துகளை வழங்க நடவடிக்கை எடுத்தல், நீண்ட வரிசையில் மக்களை நிற்க வைக்காமல் அதற்குரிய இலகு பொறிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

விவசாயம், கடற்றொழில், சுகாதாரத்துறை போன்ற வற்றில் கடமை புரிபவர்களுக்கு தடையில்லாமல் எரிபொருளை வழங்க வேண்டும். பசி, பட்டினி சாவினை தவிர்க்க வீட்டுத்தோட்டம், சமூக தோட்டங்களை உருவாக்க அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் உடனடியாக சுற்றறிக்கை அனுப்ப வேண்டும் எனக் கூறி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (4-6-104)



புற்றுநோயாளருக்கான சத்துமா மற்றும் பால் வழங்கும் திட்டத்தை சைவ அறப்பணி நிதியம் மானிடம் அறக்கட்டளையுடன் இணைந்து கடந்த வியாழக்கிழமை யாழில் ஆரம்பித்து வைத்தது. (படம்- ரவிசாந்)

# பலாப்பழ வியாபாரம் யாழில் படு வீழ்ச்சி



(யாழ்ப்பாணம்)

நாட்டில் நிலவிவரும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பிதமடைந்து வருகின்றது.

இந்நிலையில் பலாப்பழ வியாபாரமும் தட்டுப்பாடு காரணமாக இம்முறை பலாப்பழ வியாபாரம் வீழ்ச்சி கண்டுள்ளதாக பலாப்பழ வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் யாழில் குறிப்பாக சாவகச்சேரி பகுதிகளிலுள்ள பிரதான வீதிகளில் பெருமளவான பலாப்பழங்கள் குவிக்கப்பட்டு மிகவும் குறைந்த விலையில் விற்பனையாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்


நாதம் 350

Viber 076 636 3378



■ அபிமன்யு





# தமிழினத்திற்கான தீர்வை வழங்காதவரை இலங்கைக்கு மீட்சி இல்லை

நாடு கேட்டு, நகரம் கேட்டு, ஊரேனும் கேட்ட பஞ்ச பாண்டவர்க்கு இருக்க வீடேனும் தரேன் என்ற துரியோதனன் மித மிஞ்சிய படை பலம் இருந்தும் இறுதியில் தோற்று மடிந்து போகிறான்.

அதர்மம் மேலோங்கினால் அழிவு நிச்சயம். இதையே மகாபாரதம் எமக்கு கற்றுத்தந்திருக்கிறது.

இந்த நாடு சிங்கள பௌத்தத்திற்குரியது. இங்கு சிறுபான்மை இனத்தவர்கள் எவரும் வாழலாம். ஆனால் இந்த நாட்டில் அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்ற இறுமாப்பு நிறைந்த பெரும்பான்மை ஆட்சியாளர்களின் எண்ணமே இன்று இந்த நாடு இந்த நிலையிலே இருக்கக் காரணம்.

பெரும்பான்மை எனும் பெரும் கோஷத்துடன் ஆட்சி பீடம் ஏறியவர்களின் கீழ்த்தரமான சிந்தனையின் வெளிப்பாடே இன்று இலங்கை திருநாடு திண்டாட காரணமாயிற்று.

யார் ஆட்சிக்கு வந்தாலும் இது சிங்கள பௌத்த நாடு. இங்கு நாம் வைத்தது தான் சட்டம் என்ற எண்ணப்பாங்கே சிறுபான்மைத் தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்த வைத்தது என்பதை எவரும் மறுத்து விட முடியாது.

நாட்டில் புரையோடிக் கிடக்கும் இனவாதத்தை சீர்தூக்கிப் பார்க்க மறந்த ஆட்சியாளர்கள் தமிழினத்தின் நியாயமான போராட்டத்திற்கு பயங்கரவாத முத்திரை குத்தியதன் விளைவு உலக நாடுகளின் பூரண ஒத்துழைப்புடன் வன்னிப் பெரும் நிலப்பரப்பில் ஆயுதப் போராட்டம் முற்றுப் பெற்றது.

இதன் விளைவு அப்பாவித் தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கானோர் அநியாயமாகக் கொல்லப்பட்டனர்.

ஆனாலும் ஆட்சியாளர்கள் அதற்கு இம்மியும் கவலை வெளிக்காட்டாமல் வெற்றி விழாக் கொண்டாடுவதில் ஆர்வம் கொண்டிருந்தனர்.

இலங்கை வரலாற்றில் சிறுபான்மை இனத்தினர் ஒத்துழைப்பின்றி எவரும் ஆட்சி அமைத்துவிட முடியாத நிலை இருந்த போதிலும் அதை உடைக்கும் வகையில் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றி அமைந்திருந்தது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் மிகப் பலம் பொருந்திய ஆட்சியை அமைத்தார் கோட்டாபய ராஜபக்ஷ.





பயங்கரவாதத்தை அழித்து இந்த நாட்டிற்கு சுபீட்சத்தை தந்த மீட்பர்கள் ராஜபக்ஷக்கள் என்று பெரும்பான்மை சிங்கள மக்கள் போற்றிப் புகழ்ந்தார்கள். தெற்கில் இருந்து வடக்கிற்கு வரும் பெரும்பான்மை சிங்கள மக்களின் சுற்றுலா வாகனங்களில் மகிந்த, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் படங்கள் பொறிக்கப்பட்ட வாசகங்களுடன் பவனி வருவதைக் காணக்கூடியதாக இருந்தது.

சுருக்கமாகக் கூறினால் ராஜபக்ஷக்கள் சிங்கள மக்களின் கதாநாயகர்கள் என்று கூறிவிட முடியும். அந்தளவிற்கு அவர்கள் ராஜபக்ஷக்களைத் தூக்கி தலையில் வைத்துக் கொண்டாடினர்.

ஆனாலும் அந்த நிலை நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை என்பதே தான் விசித்திரமானது.

இனி ராஜபக்ஷக்களின் ஆட்சியை அசைக்க முடியாது என்றவர்களிற்கு காலம் தகுந்த பாடத்தை வழங்கியுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைக்குக் காரணமானவர்கள் ராஜபக்ஷக்கள் என்பதை முழுமையாக நம்புகிறார்கள் பெரும்பான்மை சிங்கள மக்கள்.

நாட்டைத் தவறானவர்களிடம் கையளித்து விட்டோம். அதற்கு நாங்களும் காரண கர்த்தாவாகி விட்டோம். கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சி அமைக்க ஆதரவு தெரிவித்ததை நினைத்து வெட்கித் தலைகுனிகிறோம்.

நாட்டை சரியானவர்களிடம் கையளித்து விட்டு இவர்கள் இறைவனின் திருவிளையாடலாய் அமைந்திருந்தது.

> இது சிங்கள பௌத்த நாடு. இங்கு நாம் வைத்ததுதான் சட்டம் என்ற இன-மத பேதமே தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்த வைத்தது...

ஆம், எந்த வாய்கள் ராஜபக்ஷக்களை தமது மீட்பர்கள் எனக் கூறியதோ அதே வாய்கள் இவர்களைத் திருடர்கள் எனக் கூறுவதற்கு வெகு நாட்கள் எடுக்கவில்லை என்பது இராஜினாமா செய்ய வேண்டும் என முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்த கருத்து ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆம், ராஜபக்ஷக்களின் ஆட்சி மலர மிக முக்கிய பங்காற்றியவர்களில் இந்த முருத்தெட்டுவே ஆனந்த தேரரும் ஒருவர்.

யார் யாரை ஆட்சிக்கு கொண்டுவர பாடுபட்டனரோ அவர்களே இவர்களுக்கு எதிராக பிரசாரம் செய்யத் தொடங்கி விட்டனர்.

இதைவிட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உடன் தமது பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும் என நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சக்தியினர் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை கொழும்பில் நடத்தியிருந்தனர்.

அத்துடன் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஒரு முக்கியமான விடயத்தைத் தெரிவித்திருந்தார்.

அதாவது கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி கதிரையில் இருந்து இறங்காத வரை சர்வதேசம் இலங்கைக்கு எந்த உதவியையும் செய்ய மாட்டாது.

எனவே ராஜபக்ஷ குடும்பம் கூண்டோடு வீடு சென்றால் மாத்திரமே நாடு மீட்சி பெறும். நாட்டுக்கு சர்வதேச உதவி கிடைக்கும் என அவர் தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறு பல தரப்பினரும் இந்த அரசாங்கம் கலைக்கப்பட வேண்டும். இவர்கள் வீடு செல்ல வேண்டும் எனக் கூறிக்கொண்டிருந்தாலும் அவற்றைக் காதில் வாங்காது "நான் எனது ஆட்சி நிறைவுறும் காலம் வரை எனது பதவியில் தொடர்வேன்" என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். நாடு எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை. எனது ஆட்சிக் காலம் வரை நான் விலக மாட்டேன் என்பது நாட்டின் மீது அக்கறை கொண்ட பேச்சல்ல என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்.

என்ன செய்வது தமிழினத்தை காலம் காலமாக ஏமாற்றிய பெரும்பான்மை ஆட்சியாளர்களால் இன்று நாடு நாசமாகிப் போய் விட்டது. இனியாவது புரிந்து கொண்டு தமிழினத்திற்கு உரிமைகளை வழங்கி அவர்களை நிம்மதியாய் வாழ வழி செய்தால் இலங்கைத் திருநாட்டிற்கு நல்வழி பிறக்கும். இல்லையேல் இலங்கை எதியோப்பியாவிலும் மிக மோசமான நாடாக உருமாறும் என்பது தவிர்க்க முடியாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## கொள்ளையர்கள் இருக்கும் வரை ஒரு நாடும் இலங்கைக்கு உதவ மாட்டா

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

என்ன கங்காணியார் பெற்றோல் ஏதும் கிடைத்ததோ? மூப்பர் விசாரித்தார்.

**கங்காணி:** அதெங்க கிடைக்கப் போகுது. கறுப்புச் சந்தையில 4000 ரூபாவுக்கு ஒரு லீற்றர் பெற்றோல் விற்பனையாகுது.

இந்த இலட்சணத்தில சாதாரண மக்களுக்கு பெற்றோல் எப்படிக் கிடைக்கும்.

**சாத்திரியார்:** அதெண்டால் உண்மைதான். இப்ப ஆட்டோவைப் பிடிக்கவே முடியுதில்லை. ஆட்டோ வைத்திருக்கிறவர் ஹயருக்கு ஓடுறதை விட, அடிச்ச பெற்றோலை விற்கிறது இலாபம் எண்டு நினைக்கிறார்...

**சிறாப்பர்:** அதுசரி எரிபொருள் தட்டுப்பாடு, அரச நிர்வாக முடக்கம், பள்ளிகளுக்கு மாணவர்கள் போக முடியாத பரிதாப நிலைமை இப்படியாக இருந்தும் அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழாததற்குக் காரணம் என்ன?

**விதானையார்:** அது தானே எரிபொருள் இந்தா வருகுது, அந்தா வருகுது எண்டு ரணில் விக்கிரமசிங்க பூச்சாண்டி காட்டுகிறார். அதை நம்பி சிங்கள மக்கள் அமைதியாக இருக்கினம்.

**பண்டிதர்:** விதானையார் சொல்லுறது ஒரு காரணம். அதைவிட இன்னுமொரு காரணமும் இருக்குது.

**மூப்பர்:** என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்.

**பண்டிதர்:** பொருளாதார நெருக்கடியில சிங்கள மக்கள் நல்லா உடைஞ்சு போய்ச்சினம். போதாக் குறைக்கு தென் பகுதியில நடந்த ஆர்ப்பாட்டங்களின் போது வீடெரிப்புச் சம்பவங்களோட தொடர்புபடுத்தி ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருக்கினம்.

எனினும் இந்த கைதைக் கண்டிக்கவும் தடுத்து நிறுத்தவும் போராட்டத்தில ஈடுபட்டவர்கள் தவறி விட்டனர்.

இதில, நொந்து போன சிங்கள மக்கள் இனி எங்கட பாட்டைப் பார்ப்பம் எண்ட முடிவுக்கு வந்திட்டினம்.

**சாத்திரியார்:** அப்ப இனி ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராட்டம் நடக்காதோ?

**வாத்தியார்:** பொதுவில அடிப்படை வசதி இருந்தால் தான் போராட்டமும் நடக்கும். ஆனால் இன்றைய நிலையில சிங்கள மக்கள் பட்டினி நிலைமைக்கு வந்தி[illegible] விட்டினம்.

இந்தாப் பாருங்க பசிக் கொடுமையால தாயும் பிள்ளைகளும் எம்பிலிப்பிட்டிய-சந்திரிகா குளத்தில குதிச்சிருக்கினம். இதில 2 பேர் இறந்து போக ஒருவர் காப்பாற்றப்பட்டிருக்கிறார் எனும் போது சிங்கள மக்களின்ர அவலம் எப்படி என்பது தெரிகிறதுதானே.

**சிறாப்பர்:** அப்ப ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் ரணில் என்ற ஆட்சி தொடர்ந்து நிலைக்குமோ.

**விதானையார்:** பொதுத் தேர்தலின் போது மக்களால நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க பிரதமர். தேர்தலுக்குப் பிறகு மக்களால வெறுக்கப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி.

ஆக, மக்களால வெறு[illegible] கோட்டாபய ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதியும் பிரதமருமாக இருந்து ஆட்சி நடத்துகிற அளவில இலங்கையின்ர நிலைமை வந்திட்டுது.

**கங்காணி:** ஓ! அது தானே இலங்கைக்கு உதவுறதுக்கு ஒரு நாடும் தயாரில்லை. குடுக்கிற உதவியையெல்லாம் கொள்ளையடிச்சால் எந்த நாடு தான் உதவி செய்யும்.

ஒருசில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த யப்பானியத் தூதுவர் இலங்கை ஆட்சியாளர்களை நம்பி எந்த உதவியையும் வழங்க முடியாதென்று வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

**விதானையார்:** இது மட்டுமல்ல கங்காணியார், இப்ப இலங்கையில எங்கும் ஊழல் தலைவிரித்தாடுது.

ஏற்றுமதி, இறக்குமதி, டொலர் பரிமாற்றம் என அரச நிர்வாகம் முழுவதிலும் ஊழல் குவிந்து கிடப்பதால இனி இலங்கையைக் காப்பாற்ற முடியாது.

**சிறாப்பர்:** இலங்கை ஆட்சியாளர்களின் நேர்மையீனத்தை அறிந்ததால தானே அமெரிக்கா 12 மில்லியன் அமெரிக்க டொலரை மட்டும் இலங்கைக்கு வழங்கியிருக்குது.

12 மில்லியன் அமெரிக்க டொலர் என்பது ஒரு தொகையோ. இவர்களிட்டக் குடுத்தால் அவர்கள் களவெடுத்துப் போடுவார்கள் என்பதால தான், மிகச் சிறிய தொகையை வழங்கி, நிலைமையை அமெரிக்கா உணர்த்தியிருக்குது.

**சாத்திரியார்:** என்ன இருந்தாலும் மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமர் பதவியில இருந்து துரத்தின மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் துரத்தியிருப்பினம்.

ஆனால் பதவி ஆசை பிடித்த ரணில் விக்கிரமசிங்க இடையில புகுந்து பிரதமர் பதவியை எடுத்ததால எல்லாம் கெட்டுப் போயிற்றுது. இனி கடவுள் உதவி செய்தால் அல்லாமல் வேறு எதுவும் நடக்காது.

**பண்டிதர்:** கடவுள் என்னெண்டு உதவி செய்கிறது. சிவபூமி என்று போற்றப்படும் இலங்கையில் சிவநிந்தை நடக்குது. இந்தக் கட்டத்தில நாடு அழிவைத்தான் சந்திக்கும்.


**வாத்தியார்:** என்ன இருந்தாலும் எதிர்வரும் 6 ஆம் திகதி திருக்கேதீச்சரநாதனுக்கு மஹா கும்பாபிஷேகம் நடக்கப் போகுது.

எல்லாரும் கும்பாபிஷேகத்தில கலந்து கொண்டு இந்த நாட்டைக் காப்பாற்றுமாறு திருக்கேதீச்சரப் பெருமானிட்ட வேண்டுதல் செய்தால், நிச்சயம் எங்களுக்கு வழி கிடைக்கும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உணவின் அருமை தெரியாதவர்களை என்னவென்று சொல்ல வியாசரே?






வியாசரே பெற்றோல் வருமா? வராதா? ஒரு முடிவைச் சொல்லுங்கப்பா. எத்தினை நாளைக்குத்தான் வரிசையில் நிற்க முடியும்?

**சிவம் — வதிரி**

**நாடு எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை என்று பதவியை பற்றிப் பிடிப்பவர்களால் நாடு முன்னேறுமா வியாசரே?**

ஒரு நாளும் முன்னேறாது. நாட்டில் அரிசி இல்லை, சீனி இல்லை, மா இல்லை, பால்மா இல்லை, எரிவாயு இல்லை, எரிபொருள் இல்லை அப்பா சாமி இங்கு எதுவுமே இல்லை.

இந்த எதுவுமே இல்லாத நாட்டுக்கு எதுக்கப்பா ஒரு பதவி அதற்கொரு கதிரை அதில் ஒரு அதிகாரம். இது எதுவெனில் வரட்டுக் கௌவரம் கொஞ்சம் அதிகமாகாச் சொன்னால் ஒரு வகை அதிகாரம். சரி விடுங்கள் நடந்து, நடத்தி முடிக்கட்டுமே.

**திருக்ஷி — யாழ்ப்பாணம்**

**திரைப்படம் பார்க்கும் பழக்கம் உண்டா வியாசருக்கு?**

முன்பு இருந்தது. என்றைக்கு வீட்டில் கேபிள் ரிவி பூட்டப்பட்டதோ அன்றைக்கே குடும்பத்தைச் சீரழித்து சின்னாபின்னமாக்கும் சீரியல் நாடகங்களுக்கு அடிமையாகி விட்டேன்.

வேறு என்ன வேலை செய்தாலும் குறிப்பிட்ட அந்த நேரத்தில் கையும் ஓட மாட்டேங்கிறது. காலும் ஓடமாட்டேங்கிறது.

ரிவியின் முன் இருந்து அந்த இழுவல் நாசத்தை ரசித்தால் தான் மனம் சாந்தியடைகிறது.

## அன்பு வாசகர்களே உங்கள் கேள்விகளை 076 097 3126 SMS செய்யுங்கள்

**ராஜினி — வடமராட்சி**

**நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை. என்பது எதுவோ?**

நடுச் சாமத்தில் பேக்கரிக்குப் பக்கத்தால சென்ற அனுபவம் உண்டா.

போரணையில் அவியும் பாண் வாசனை தேனாமிர்தமாய் இருக்கும்.

அடடா பாண் தின்றால் எப்படி இருக்கும் என்று மனம் அக்கலாய்க்கும்.

ஆனாலும் பயனென்ன? அந்த நடுச்சாமத்தில் பாண் கேட்டால் அடிதான் தருவாங்கள்.

அதனால் அந்த வாசணையை நுகர்வதுடன் சென்றுவிடுவது தான் நடந்தேறுகிறது.

**எக்ஸ் வை.இசற்**

**எனக்கு வயது 35 ஐ கடந்து விட்டது. நான் திருமணம் செய்யலாம் என முடிவு செய்துள்ளேன், செய்யலாமா?**

"தற்கொலை பண்ணனும் என முடிவு செய்த பின் விசம் குடித்தால் என்ன தூக்குமாட்டி செத்தால் என்ன"

இது ஒரு திரைப்படத்து வசனமாக இருந்தாலும் இதில் பல உண்மைகள் பொதிந்தே இருக்கின்றன.

"கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்" என்பது திருமண வாழ்விற்கும் சாலப் பொருந்தும் போல.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

**076 097 3126**

என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்
அல்லது ஆசிரியர், வியாசர் பதிவுகள், வலம்புரிப் பத்திரிகை, இல.03, 02 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

**தருஷ் — யாழ்ப்பாணம்**

**வியாசரே பெற்றோல் வருமா? வராதா? ஒரு முடிவைச் சொல்லுங்கப்பா. எத்தினை நாளைக்குத்தான் வரிசையில் நிற்க முடியும்?**

எனது வீட்டுக்கு பக்கத்தில் இருப்பவர் முச்சக்கர வண்டியில் பாய், தலையணை, பெற்சீற், சுடுநீர் போத்தல், சுவிற்றர் என்பவற்றை ஏற்றிக்கொண்டிருந்தார்.

நானும் என்னவோ ஏதோ என நினைத்து, ஏன் ஆருக்கு என்ன வருத்தம். ஆஸ்பத்திரிக்கு வெளிக்கிடுகிறீகளோ என்றேன்.

அதற்கு அவர் சொன்னார் இல்லை அண்ணன் பெற்றோல் செட்டிற்கு பெற்றோல் வருதாம். [illegible] எண்டு வெளிக்கிடுறன் என்றார்.

**சுதன் — குப்பிழான்**

**ஜே.வி.பியினர் இப்போது தமிழினத்திற்காக கண்ணீர் விடுகின்றனரே?**

ஜே.வி.பி.யினர் மட்டும் அல்ல இப்போது அனைவரும் தான் தமிழினத்திற்காக கண்ணீர் விடுகின்றனர். ஆனால் தமிழினம் தான் தன்னை நினைத்து கண்ணீர் விடவில்லை. ஏனென்றால் தமிழினத் தின் கண்களில் கண்ணீர் இல்லை.

அவ்வளவிற்கு அவர்கள் பட்ட துன்பங்கள் கண்ணில் உள்ள நீர் வற்றும் வரை அழுது விட்டார்கள் அவர்கள்.

**நேசன் — இணுவில்**

**பட்டினிச்சாவுகள் தலைதூக்கும் போலத் தெரிகிறதே வியாசரே?**

தலை தூக்கி விட்டன. பிள்ளைகள் பசியில் வாடுகின்றன. அவர்களுக்கு கொடுக்க உணவு இல்லை. அதனால் தனது குழந்தைகள் இரண்டையும் வாவியில் தூக்கி வீசிவிட்டு தானும் அதில் குதித்து தற்கொலை செய் திருக்கிறாள் ஓர் அபலைத் தாய்.

கொடுக்க உணவு இல்லை எனின் அவளால் இதைத் தவிர வேறு எதைச் செய்துவிட முடியும் சொல்லுங்கள்.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**உணவின் அருமை தெரியாதவர்களை என்னவென்று சொல்ல வியாசரே?**

தட்டு நிறைய சோற்றை வைத்துக்கொண்டு சிந்திச் சாப்பிடுபவர்கள் வாழும் இந்த உலகத்தில்தான் ஒரு வேளை உணவுக்கே வழியில்லாமல் பலர் அல்லல்படுகிறார்கள்.

உணவகங்களில் ஒரு நாளைக்கு கொட்டப்படும் உணவுகளைச் சேர்த்தாலே இந்த நாட்டில் பஞ்சம் பட்டினியே இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா



## கல் மனம் கரைந்ததே!

சாகரபுரி இளவரசி சந்திரிகா மிக அழகானவள். ஒருமுறை அவள் அண்டை நாட்டிற்கு விருந்தாளியாகச் சென்றாள். அவளை அந்நாட்டு இளவரசன் ஜெயசேனன் வரவேற்றுப் பல இடங்களைச் சுற்றிக் காண்பித்தான். இதனால் இருவரும் நெருங்கிப் பழகி ஒருவரை மற்றவர் நேசிக்கலானார்கள்.

சந்திரிகா தன் நாட்டிற்குத் திரும்பிச் சென்றாள். இதற்குச் சில நாட்களுக்குப் பிறகு சந்திரிகாவிற்கு சுயம்வரம் என்று ஜெயசேனனுக்கு அழைப்பு கிடைத்தது. அவன் சாகரபுரிக்குப் போக எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கையில் பல்லூகன் என்ற ராட்சஸன் சந்திரிகாவை கவர்ந்து கொண்டு போய் விட்டான் என்ற தகவல் கிடைத்தது.

பல்லூகன் கொடியவன், பலமிக்கவன். மந்திர தந்திரங்களில் தேர்ந்தவன். அவன் இருப்பது பல்லூகவனம். அந்தக் காட்டிற்குள் போனவர்கள் உயிருடன் திரும்பி வந்ததே இல்லை. அந்தக் காட்டினுள் தான் சந்திரிகாவை பல்லூகன் சிறை வைத்தான்.

சந்திரிகாவின் தந்தை இதனால் கவலையில் ஆழ்ந்து நோயுற்றார். ஜெயசேனனோ சந்திரிகாவின் மீது கொண்ட ஆசையில் பல்லூகனை எதிர்த்துப் போராடி அவளை மீட்டு வருவது என்று உறுதி கொண்டான். அவனை அவனது தாய், தந்தையர் தடுத்தும் கேளாமல் அவன் பல்லூகவனத்திற்குச் சென்றான்.

அந்தக் காடு ஆரம்பமாகும் இடத்தில் சில அரச குமாரர்களை அவன் கண்டான். அவர்களும் சந்திரிகாவை பல்லூகனிடமிருந்து விடுவிக்க வந்தவர்கள் தானாம். அவர்களை பல்லூகன் வெகு எளிதாகப் பிடித்து பல்லிகளாகவும் தவளைகளாகவும் கொக்குகளாகவும் மாற்றி "நீங்களெல்லாம் இப்போதே கிளம்பி இக்காட்டைக் கடந்து போய் விட்டால் உங்கள் சுய உருவை அடைவீர்கள். இல்லா விட்டால் இதே உருவில் இங்கே திரிந்து பல கஷ்டங்களை அனுபவிப்பீர்கள்" எனக் கூறினானாம். எல்லோரும் உடனே கிளம்பினர். சிலர் பாம்புகளுக்கும் வேறு சிலர் கொடிய மிருகங்களுக்கும் இரையாகினர். ஒரு சிலரே காட்டைக் கடந்து வந்து முன் போல அரசகுமாரர்களானார்கள். அவர்கள் அங்கேயே இருந்து வேறு அரச குமாரர்கள் சந்திரிகாவிற்காக வந்தால் எச்சரிக்கலானார்கள்.

அவர்கள் ஜெயசேனனிடம் "நீ திரும்பி போய்விடு. பல்லூகனை எதிர்க்க யாராலும் முடியாது. சந்திரிகாவையும் மறந்துவிடு" என்று சொன்னார்கள். (தொடரும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்






வீணை வித்தகன்; மத யானைகளை எதிர்த்தவன்; வேதம் கற்றவன்; சிவனை வணங்கிச் சீர்மைகள் பெற்றவன்; மூவர்களை நடுங்க வைத்தவன்; தேவர்களை ஏவல் கொண்டவன்; களம் பல கண்டவன்; கார்வண்ணனைக் கடும் போரில் நேருக்கு நேர் சந்தித்தான்.

இராமன் கூரிய அம்புகள் கம்பன் சொற்களைப் போல, இராவணன் மார்பில் ஆழப் பதிந்தன; தேரும் கொடியும் உடன் கட்டை ஏறின் தோல்வி, முகவரி தேடி முன் வந்து நின்றது; அவதாரப் பணி நிறைவேறிற்று; அரக்கரை அழித்து, அறத்தை நிலை நி[illegible]னான் இராமன்.

அறம் வென்றது; பாவம் தோற்றது.

**இறுதி அவலம்**

இராவணன் பரு உடல், பார் மீது கிடந்தது; அவன் ஆருயிர் அனைய மனைவி மண்டோதரி, அவன் உடல் மீது விழுந்து படிந்து, புரண்டு அழுதாள்.

"எள் இருக்கும் இடமும் இன்றிச் சீதை [illegible] காதல் [illegible] என்று தடவியதோ இராமன் வாளி" என்று கதறி அழுதாள்.

**"வெள்எருக்கஞ் சடை முடியான்**
**வெற்பு எடுத்த திருமேனி மேலும் கீழும்**
**எள்இருக்கும் இடன் இன்றி உயிர் இருக்கும் இடன்நாடி இழைத்தவாறோ?**
**கள்இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்தகாதல்**
**உள் இருக்கும் எனக்கருதி உடல் புகுந்து தடவியதோ? ஒரு வன்வாளி"**

என்று ஏங்கினாள்; அவன் உயிரைத் தேடித் தன் உயிரை அனுப்பினாள்; அது திரும்பவே இல்லை.

**முடிவுரை**

நிகழ்ச்சிகள் வேகமாய்த் தொடர்ந்தன; வீடணன் இலங்கைக்கு ஆட்சிக்கு உரியன் ஆனான்; இலக்குவனைக் கொண்டு இராமன் அவனுக்குப் பட்டம் சூட்டினான்; அனுமன் அசோகா வனத்துக்குச் சென்று, சீதைக்குச் செய்தி சொல்லி, அவள் சோகத்தை மாற்றினான்.

அழைத்து வரப்பட்ட சீதை வரவேற்பில் ஒருதடை ஏற்பட்டது; இராமன் சராசரி மனிதனாய் நடந்து கொண்டான்; சீதையை ஏற்க மறுத்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது வெறும் கிரிக்கெட் வெற்றியல்ல ஒரு தேசத்தின் வெற்றி

சமீபத்தில் இலங்கையில் நடந்த ஒரு நல்ல நிகழ்வு இது தான். இலங்கை மக்களின் முகத்தில் மீண்டும் சிரிப்பலைகள் தென்பட்டன என கப்டன் சனாகா இலங்கை மக்களுக்கு செய்தி சொன்னார்.

பொருளாதார ரீதியாக உடைந்து போயிருக்கும் இலங்கை இன்னும் சீராகவில்லை. ராஜபக்ஷ தனது பதவியிலிருந்து விலகி ஓடி ஒளிந்திருக்கிறார். ரணில் விக்கிரமசிங்க புதிய பிரதமராக அவரின் இடத்தை நிரப்பியிருக்கிறார். இதைத் தவிர அங்கே எந்த மாற்றமும் நிகழவில்லை. மக்களின் பசி இன்னும் ஆற்றப்படவில்லை. அழுகுரல்கள் ஓயவில்லை. அரசின் மீதான அதிருப்தியும் பெற்றோல் டீசலுக்குக் காத்திருக்கும் வரிசையும் ஒரே சீராக பெருகிக் கொண்டிருக்கிறது. இப்படியான அமைதியற்ற செய்திகள் மட்டுமே இலங்கையிலிருந்து வந்துகொண்டிருந்த சூழலில் கொஞ்சம் ஆசுவாசமடையும் வகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. அதன் நிமித்தம் இலங்கை மக்கள் கொஞ்சம் இளைப்பாறியிருப்பதாகத் தெரிகிறது. தொலைந்து போயிருந்த சிரிப்பை அவர்கள் கொஞ்சமேனும் கண்டடைந்திருப்பதாக தெரிகிறது. இதற்கெல்லாம் காரணம் கிரிக்கெட்!

ஜூன் 25, 1983 இல் கபில் தேவ் தலைமையிலான இந்திய அணி முதல்முதலாக உலகக் கோப்பையை வென்றது. அந்தச் சம்பவத்தை மையப்படுத்தி எடுக்கப்பட்ட **“83 the Film”** படத்தில் ஒரு காட்சி இடம் பெற்றிருக்கும். மேற்கிந்திய தீவுக்கு எதிரான இறுதிப் போட்டியை அனைவரும் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த சமயத்தில் இந்தியாவின் ஒரு பகுதியில் மதரீதியிலான கலவரங்கள் நடந்துக்கொண்டிருக்கும். அப்போது பிரதமரான இந்திரா காந்தி அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கும் பொருட்டு இந்தியா ஆடும் அந்த உலகக்கோப்பை இறுதிப்போட்டியை அனைவரும் காணும் வகையில் ஏற்பாடுகளைச் செய்ய சொல்வார். கிரிக்கெட்டால் கலவரங்கள் ஓயும். ஒரே தேசமாக மக்கள் அனைவரும் கபில்தேவை தலையில் தூக்கி வைத்து கொண்டாடியிருப்பர்.

இலங்கையிலும் கிரிக்கெட் இப்போது அதைத்தான் செய்திருக்கிறது. மக்களைக் கொஞ்சம் அமைதிப்படுத்தியிருக்கிறது. அவர்களின் சிரிப்பை மீட்டுக்கொடுத்திருக்கிறது.

ஆரோன் ஃபின்ச் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியை 5 போட்டிகள் கொண்ட ஓடிஐ தொடரில் 3-2 என வீழ்த்தியிருக்கின்றனர். இப்போதைய இலங்கை அணி அவ்வளவு வலுவான அணி கிடையாது. இலங்கையின் பொருளாதாரம் விழுவதற்கு முன்பே இலங்கையின் கிரிக்கெட் விழுந்துவிட்டது. பொருளாதாரத்தை போன்றே தரைமட்டத்திலிருந்து மீண்டெழும் முயற்சியில்தான் கிரிக்கெட்டும் இருக்கிறது. இடையிடையே சில நம்பிக்கைக்குரிய வெற்றிகள் அந்த அணிக்கு கிடைத்திருந்தாலும் அந்தப் பழைய வலுவான அணியாக இலங்கையால் இன்னும் மாறவே முடியவில்லை. இந்த ஆண்டின் தொடக்கத்தில் அவுஸ்திரேலியாவிற்குச் சென்று 4-1 என இருபது-20 தொடரை இழந்துவிட்டு வந்தனர். அப்படியே இந்தியாவிற்கு வந்து இங்கேயும் அடிவாங்கிவிட்டு சென்றனர். ஜிம்பாப்வே மற்றும் வங்கதேசத்திற்கு எதிராக மட்டும்தான் சில ஆறுதல் வெற்றிகளை பெற்றிருந்தார்கள்.

> **சமீபத்தில் இலங்கையில் நடந்த ஒரு நல்ல நிகழ்வு இது தான். இலங்கை மக்களின் முகத்தில் மீண்டும் சிரிப்பலைகள் தென்பட்டன என கப்டன் சனாகா இலங்கை மக்களுக்கு செய்தி சொன்னார்.**

இப்படியான நிலையில்தான் அவுஸ்திரேலியாவை இலங்கை அணி எதிர்கொண்டிருந்தது. இலங்கை வீரர்கள் உளவியல் ரீதியாகவே அவ்வளவு திடகாத்திரமாக இருந்திருக்கவில்லை. வனிந்து ஹசரங்கா, மஹீஸ் தீக்சனா போன்றோர் இந்தியாவில் ஐ.பி.எல்-இல் ஆடிக் கொண்டிருக்கும் போதே தங்கள் நாட்டை எண்ணி பெரிதும் வருத்தமுற்று இருந்தனர்.

இந்தச் சூழலில் அவுஸ்திரேலிய அணி இலங்கையை வெல்வது சுலபம் என்றே எதிர்பார்க்கப்பட்டது. எதிர்பார்த்ததை போன்றே சுலபமாக வெல்லவும் செய்தார்கள். ஆனால், அது இருபது-20 தொடர். முதலில் நடந்த 3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை அவுஸ்திரேலிய அணி 2-1 என வென்றது. இதன்பிறகு நடந்த ஓடிஐ தொடரில்தான் இலங்கை வெகுண்டெழுந்தது.

லொக்டவுனுக்குப் பிறகு இரண்டாண்டுகள் கழித்து இப்போதுதான் மைதானங்களில் போட்டிகளைக் காண இரசிகர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. நெருக்கடி நிலையிலும் தங்கள் அணிக்காக இரசிகர்கள் திரண்டு வந்திருந்தனர். முதல் இருபது-20 போட்டியில் தோற்ற பிறகு இரண்டாவது போட்டிக்கும் திரளாக வந்து மைதானத்தை நிரப்பியிருந்தனர். இரண்டாவது போட்டியிலும் தோற்று இருபது-20 தொடரையே இழந்த போதும் இரசிகர்கள் கைவிட்டுவிடவில்லை. மீண்டும் கூடினர். மைதானம் மீண்டும் நிரம்பியது.

அரசாங்கம், ஆட்சியாளர்கள், அதிகார வர்க்கம் எல்லாவற்றின் மீதுமே அவர்களுக்கு வெறுப்புதான் எஞ்சியிருந்தது. மைதானங்களில் கூடிய இந்த ஜனத்திரள் இலங்கை வீரர்களுக்கு ஒரு புது தெம்பை கொடுத்திருக்கக்கூடும். இந்தத் தேசத்திற்கு நாம் என்ன செய்யப் போகிறோம் என்னும் கேள்வியை வீரர்களுக்குள் எழுப்பியிருக்கக்கூடும். மனச்சோர்வில் அமைதியுற்று உழன்று கொண்டிருக்கும் மக்களின் உதட்டில் சிரிப்பை வரவழைப்பதை விட உன்னதமான காரியம் வேறில்லை. இலங்கை அணி அதை செய்தது.



ஓடிஐ தொடரின் முதல் போட்டியைத் தோற்ற பிறகும் நம்பிக்கையிழக்காமல் அடுத்த மூன்று போட்டிகளையுமே வென்று அவுஸ்திரேலியாவிற்கு அதிர்ச்சியளித்தது. ஐந்தாவது போட்டிக்குச் செல்லும் முன்பே தொடரை வென்று சம்பியன் ஆகியிருந்தது.

முதல் ஒருநாள் போட்டியில் முதலில் பேட்டிங் செய்து 300 ரன்களை இலங்கை அடித்தது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக மழை குறுக்கே புகுந்து ஆட்டம் காட்டிவிட டக்வொர்த் லீவிஸ் முறைப்படி அவுஸ்திரேலியா வென்றிருந்தது. மழை இல்லாவிடில் முதல் போட்டியே இலங்கைக்குச் சாதகமாக முடிந்திருக்கக்கூடும்.

இரண்டாவது போட்டியிலும் மழை குறுக்கிட்டது. ஆனாலும் இலங்கை வென்றது. 220 ரன்களை மட்டுமே எடுத்து விட்டு அவுஸ்திரேலியாவை 189 ரன்களுக்குள் ஓல் அவுட் ஆக்கியிருந்தனர்.

மூன்றாவது போட்டியில் இலங்கைக்கு 292 ரன்கள் டார்கெட். நிஷாங்காவும் குஷால் மெண்டீஸும் மட்டுமே 213 ரன்களுக்கு கூட்டணி அமைத்து இலங்கையை சௌகரியமாக வெல்ல வைத்திருந்தனர்.

சமீபத்தில் இலங்கையில் நடந்த ஒரு நல்ல நிகழ்வு இது தான். இலங்கை மக்களின் முகத்தில் மீண்டும் சிரிப்பலைகள் தென்பட்டன என கப்டன் சனாகா இலங்கை மக்களுக்கு செய்தி சொன்னார். ஆனால், இலங்கை மக்கள் தங்கள் கொண்டாட்டத்திற்குக் காரணமான இலங்கை வீரர்களை மட்டும் கொண்டாடவில்லை. அவர்களோடு சேர்த்து அவுஸ்திரேலிய வீரர்களையுமே கொண்டாடினர். தொடரை இலங்கை வென்ற பிறகு சம்பிரதாயத்திற்கு நடந்த ஐந்தாவது போட்டியை இரசிகர்கள் அவுஸ்திரேலிய வீரர்களைக் கொண்டாட பயன்படுத்திக் கொண்டனர்.

நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மின்வெட்டுகளையெல்லாம் பொருட்படுத்தாமல் தங்கள் நாட்டிற்கு வந்து ஆடிய அவுஸ்திரேலிய வீரர்களுக்கு இலங்கை இரசிகர்கள் செய்த மரியாதை அது. அவுஸ்திரேலியா தொடரை இழந்தது. ஆனால், அதற்காக அவர்கள் பெரிதாக வருந்தியிருக்கமாட்டார்கள். என இந்தத் தொடருக்கு முன்பாக அவுஸ்திரேலிய கப்டன் ஃபின்ச் பேசியிருந்தார். சொன்னதைத்தான் செய்துவிட்டார்களே!

இந்தத் தொடர்களின் மூலம் வரும் வருமானத்தில் கணிசமானவை நெருக்கடியைத் தணிக்கும் வகையில் பொது நலத்திற்காக மட்டுமே பயன் படுத்தப்பட இருப்பதாகவும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

கடவுளின் கோபம் தானாகத் தணிவதற்கு சில நிமிடங்களா, னது.

எல்லா அகதிகளையும்போல அவனுக்கும் தன் வாழ்வு தொடர்பாக எண்ணுக்கணக்கற்ற நியாயங்கள் இருந்தன. தன்னை இந்த முகாமில் வருடக்கணக்கில் தடுத்து வைத்திருப்பது என்பது, தான் செய்த கொலைகளிலும் பார்க்கப் பாரதூரமான குற்றம் என்பது, அவன் தரப்பு வாதம். தன்னை விசாரணை செய்கின்ற சகல அதிகாரிகளிடமும் அதை அவன் திரும்பத் திரும்பக் கூறியிருக்கிறான்.

அவனுக்குள் திரளுகின்ற தூய அவனுடன் சிரித்தபடிதான் பேசுவார். கூரான மூக்கு. பழுத்த கனிகள்போல கன்னத்தின் நடுவில் மாத்திரம் சிவப்பு வண்ணம் தூக்கலாக இருக்கும். தோள்களுக்கும் தலைக்கும் இடையில் நீண்ட தூரம். அந்த தூரத்தை இணைக்கும் கழுத்து, அவரது உயரத்தை எப்போதும் எடுப்பாகவே காட்டும். சிஸ்டர் முகாமில் எங்கு அகதிகளோடு பேசிக்கொண்டிருந்தாலும் கண்டு பிடித்துவிடலாம். அப்படியொரு வளர்த்தி.

திங்கட்கிழமைகளில் ஒன்பது மணிக்கே வந்துவிடும் சிஸ்டர், முகாமிலுள்ள பெண்கள் அனைவ புள்ளி வழங்கும் ஒழுங்கொன்றும் நடைமுறையிலிருந்தது.

அதாவது, முகாமில் இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு, ஒவ்வோர் நடவடிக்கைக்கும், தலா பத்துப் புள்ளிகள் வழங்கப்படும்.

ஒவ்வோர் அகதியும் அதிகபட்சம் நூறு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளலாம். ஆகவே, முகாமிலுள்ள அனைத்து அகதிகளும் நடவடிக்கைகளில் மனமுவந்து பங்குபற்றுவார்கள், மரக்கறிகளோடு சேர்ந்து புள்ளிகளையும் அறுவடை செய்வார்கள். இந்தப் புள்ளிகளைவைத்து, முகாமிலுள்ள சிறிய கடையில், வதற்கு, இந்தக் கடை பெரும் வாய்ப்பாக அமைந்திருந்தது.

குடும்பத்தின் தேவைகளை உய்த்துணர்ந்து நிறைவேற்றுவதில், மேலதிகச் சிரத்தையோடு செயல்படுகின்ற பெண்கள், இதைக் கருத்தில் கொண்டு சிஸ்டர் வழிநடத்துகின்ற அனைத்து நடவடிக்கைகளிலும் பங்கெடுப்பர். தவறாமல் தங்களது பெயர்களைப் பதிவுசெய்வர்.

புள்ளிகளை அறுவடை செய்து குடும்பத்துக்குப் பொருள்களை வாங்கக்கூடிய இலகுவான முறையைப் பயன்படுத்துவதில், அக்கறையோடு செயல்படுவார்.

இந்த முகாமில் அவதானித்த வரை, பெண்கள்தான் இடத்துக்கு ஏற்றவாறு தங்களைத் துரிதமாக மாற்றிக்கொள்ளக்கூடியவர்களாகக் காணப்பட்டார்கள். குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்களாகத் தங்களை உருமாற்றியிருந்தார்கள். விசா விடயமோ, வேறு சிக்கல்களோ எதுவென்றாலும், அவற்றை உணர்வுபூர்வமாக அணுகாமல், திட்டமிட்டுக் காரியமாற்றும் சமயோசிதம் நிறைந்தவர்களாகச் செயற்பட்டார்

**அல்பா கம்பவுண்டில் வந்து ஆண் அகதிகளிடம் சிகரெட் வாங்கிப் புகைக்கக் கற்றுக்கொண்ட சில இரான், ஆப்கன் அகதிப் பெண்கள், தங்களுக்கு இதுவரை காலமும் விதிக்கப்பட்டுவந்த தடைகளை உடைத்துவிட்ட உணர்வில் திளைத்தார்கள். இவ்வளவு காலமும், தாங்கள் உலகின் இருண்ட மூலையில் வாழ்ந்துவந்த களைப்பிலிருந்து வெளியில் வந்து முகாமில் ஆசுவாசம் கொண்டிருந்தார்கள்.**

## வலி சொல்லும் தொடர்... 37

கோபம், எப்போதும் தீயதைச் சிதைக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன் கடவுள்.

எத்தனை வருடங்களானாலும், கடவுள் தன்னைத் தொடர்ந்தும் நம்புகின்றவனாகவே இந்த முகாமில் வாழ்ந்தான். ஒவ்வொரு நாள் காலையிலும் அந்த உணர்வை ஜிம்மில் சென்று கூர் செய்து கொள்வான்.


சொல்லப்போனால், நீதனுக்குக் கடவுள் இந்த முகாமில் மிகப் பெரியதொரு கலங்கரை விளக்கு. இருவருக்குமிடையிலான நட்பு இனம்புரியாத விகிதத்திலிருந்தது.

சிஸ்டர் மரீனா, மெல்போர்ன் முகாமிலுள்ள அகதிகளின் உள, உடல் வள மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வாரத்தில் மூன்று நாட்கள் வந்து போகும் பேரன்புமிக்க பெண் உத்தியோகத்தர்.

அவிக்காத நூடில்ஸ் போன்ற வெள்ளை முடி. சிஸ்டர் பேசும் போது மேலும் கீழுமாகக் கும்மியடிக்கும். அதை வாரிக்கொண்டே அவர் பேசுவதை, சுருக்கமாகச் சிரிக்கிறார் என்ற வரையறைக்குள் அடக்கிவிடலாம். ஏனெனில், அவரின் பேச்சில், சொற்களைவிட சிரிப்பொலிகள்தான் அதிகமிருக்கும். கொலையையே செய்துவிட்டு எதிரில் ஒருவன் கத்தியோடு வந்து நின்று கதைத்தாலும், சிஸ்டர் ரையும் மேற்குப் புற வேலியோரமாக் கூட்டிச் சென்று, தோட்ட வேலைகள் சொல்லிக்கொடுப்பார். மிளகாய், பூசணி, தக்காளி என்று மரக்கறி வகைகளை நீண்ட தூரத்துக்குப் பாத்தி கட்டி, சிறப்பான மண் நிரப்பி, அதில் விதைகளை நாட்டித் தோட்டம் செய்வதற்குப் பயிற்றுவிப்பார். அதற்கான சகல பொருட்களையும் குடிவரவு அமைச்சு அலுவலகத்துடன் பேசி, வாங்கி வைத்துக் கொண்டுதான், அகதிகளை இந்த வேலையில் ஈடுபடுத்துவார். அவர்களுடன் சேர்ந்து உடல் முழுவதும் மண் குளித்தபடி தானும் தோட்ட வேலை செய்வார்.

நான்கு சுவர்களுக்குள் குந்தியிருந்து எந்நேரமும் விசா நினைப்பாகவே வருந்திக்கொண்டிருக்கும் பெண்களுக்கு, திங்கட்கிழமைகளில் சிஸ்டரின் வருகை பெரும் தளர்வைத் தந்தது. சிஸ்டருடன் சேர்ந்து எல்லாப் பெண்களும் மிகுந்த சிரத்தையோடு தோட்டம் செய்வர். தோட்ட வேலைகளின்போது, மண்வெட்டி, கத்தி போன்ற உபகரணங்கள் பயன்படுத்தப்படவேண்டிய தேவையிருப்பதால், சிஸ்டருடன் நான்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் கண்காணிப்பில் ஈடுபட்டிருப்பர்.

மனம் இளைப்பாறுவதற்கும் உடல் பயிற்சிக்கும் இந்தத் தோட்ட வேலை மருந்தளித்தது என்பதற்கு அப்பால், இப்படியான முகாம் நிர்வாகம் ஒழுங்கும் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுவர்களுக்குப்



அகதிகள் தமக்குத் தேவையான பொருட்களை வாங்கிக்கொள்ளலாம். அகதிகளுக்கான அடிப்படைத் தேவைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் முகாமில் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆனால், மேலதிகமாக சில சிறப்பான பொருட்கள் தேவைப்படுபவர்கள், முகாமில் சம்பாதிக்கும் இந்தப் புள்ளிகளைப் பயன்படுத்தி, பிரார்த்தனை அறைக்குப் பக்கத்தில் புதன்கிழமைகளில் மாத்திரம் திறக்கும் சிறு கடையில் அந்தப் பொருள்களை வாங்கிக்கொள்ளலாம்.

உதாரணமாக, முகாமிலுள்ள அகதிகள் அனைவருக்கும் குளிப்பதற்கு சோப் வழங்கப்பட்டாலும், சிலருக்கும் சில குறிப்பிட்ட பிராண்ட் சோப் தேவையென்றால், அதை இந்தக் கடையில் வாங்கலாம். அதுபோல, நூடில்ஸ் பக்கெட், சவரம் செய்யும் இயந்திரம், சொக்லேட்டுக்கள் என்று ஏகப்பட்ட எடுப்பான பொருட்களை, அகதிகள் தாங்களே முகாமில் சம்பாதித்து வாங்குகள். பெண்களுக்கான எந்தக் கட்டுப்பாடும் இங்கிருக்கவில்லை என்பது அவர்களுக்குக் கூடுதல் சுதந்திரத்தைக் கொடுத்தது.

அல்பா கம்பவுண்டில் வந்து ஆண் அகதிகளிடம் சிகரெட் வாங்கிப் புகைக்கக் கற்றுக்கொண்ட சில இரான், ஆப்கன் அகதிப் பெண்கள், தங்களுக்கு இதுவரை காலமும் விதிக்கப்பட்டுவந்த தடைகளை உடைத்துவிட்ட உணர்வில் திளைத்தார்கள். இவ்வளவு காலமும், தாங்கள் உலகின் இருண்ட மூலையில் வாழ்ந்துவந்த களைப்பிலிருந்து வெளியில் வந்து முகாமில் ஆசுவாசம் கொண்டிருந்தார்கள்.

திங்கள் காலை நேரங்களில் தோட்ட வேலைகள் ஓரளவுக்கு முடிந்து, நேரம் மதியத்தை முட்டுகின்ற போது, சிஸ்டர் எல்லோரையும் குளித்துவிட்டு உணவு மண்டபத்துக்கு வரச்சொல்வார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகிதத்தில் கண்ணீர்

யட்டாம் பூச்சிகளாய்ப் பறந்தோம்
பாடசாலையில் கல்வி பயின்றோம்
சிட்டாய்க் கை கோர்த்துத் திரிந்தோம்
சிற கொடிந்து தரையிலே விழுந்தோம்
கொத்தாய் மணம் வீசத் துடித்தோம்
கோடையிலும் கவலை மறந்து சிரித்தோம்
சொத்தாய் எம் மண்ணை நினைத்தோம்
சொந்தமாய்த் தாய் மண்ணை நேசித்தோம்
விடாப் போது மென நினைத்தோம்
விவசாயமே வாழ்க்கை எனத் தொடர்ந்தோம்
முத்தாய் நெல் மணியை எடுத்தோம்
பத்தாய்ப் பெருக்கிட நினைத்தோம்- கனவில்
மொத்தமாய் விலைவாசியைக் கூட்டினார்கள்
மெத்தையில் புரண்டு புரண்டு அழவைத்தார்கள்
மொட்டாய் விரிந்த எம் வாழ்க்கையை- அரசாங்கம்
மொக்கையாக்கி விட்டது இலங்கையில்
கண்ணீர் விடுக் கதறி அழ யார் உண்டு நமக்காய்
காகிதத்தில் எழுதிப் புரிய வைக்கிறேன் உனக்காய்.

அருளப்பு ஞானப்பிரகாசம்.
சுருவில் வீதி, கரம்பொன்,
ஊர்காவற்றுறை.

## வாழும் நாட்கள் எத்தனையோ

ஆ! ம் நிறைந்த துன்பக் கடலில்
நாளும் மூழ்கும் நாடாய் எந்தன்

காலம் கடந்த சாபங்கள் எல்லாம்
கண்முன்தெரியுது கனலாம் இன்று

வளங்கள் சிறக்கும் களமாய் திகழும்
எங்கள் நாட்டின் நிலைமை இன்று

எழுந்து நிற்கும் வல்லமை இல்லா
பேதைகள் எல்லாம் நகைக்கும் அளவில்

உரிமை இழந்த இத்திரு நாட்டில்
உணவு இன்றிய நட்பினம் எல்லாம்

அளித்த வாக்கில் செய்த தவறாய்
நாளும் கலங்கினர் பலனும் இன்றி

வாழும் நாட்கள் அறியா குடிகளாய்
தாய் நிலம் எண்ணி கலங்குவர் இன்று

ந.விதுஷன்
யா/ஹாட்லிக் கல்லூரி

## தியாகப் பூக்கள்

உண்மையைப் பொய்யாக்கி
பொய்யை உண்மையாக்கி
கதைகள் காவித்திரியும்
உலுத்தர் கூட்டம்
உலவும் உலகமிது
உதவிகள் பெற்றுக் கொண்டு
உதவி செய்தவர்களின்
முதுகில் குத்தும் துரோகிகள்
நிறைந்த சமுதாயமிது
பணத்திற்காய் பாசம் காட்டும்
போலிமுகம் கொண்ட
பொல்லா மனிதர் வாழும்
பாசாங்கு மிகுந்த தேசமிது
அரிதாரம் பூசுபவர்களை
தலைவர்களாய் கனவாக்கும்
அவல நிலைக்குள்ளாகும்
சந்ததி உருவாகும் அவனியிது
வாழ்பவரை வீழ்த்துவதற்காய்
வீண்பழிகள் உரைப்பதற்கு
கூட்டாய் கூடும்
வீணர்கள் உள்ள நாடிது
போதைப் பொருட்களால்
மதிமயங்கி ஈனச் செயல்
ஈரமற்ற இதயத்து வெறியர்
உற்பத்தியாகும் நித்திலமிது
பணத்திமிருக்கும் சாதி வெறிக்கும்
சாமரம் வீசும் வால் பிடிகள்
பக்கப் பாட்டு பாடும் பூமியிது
அநியாயத்தின் ஆட்சி இப்படியென்றால்
நீதிப் பூக்கள் பூக்குமா?
உண்மை முக நல் மக்களென
பாருலகாகுமா?

சி.இ. அன்புதுரை
மானிப்பாய்

## மௌனத்தின் தேடல்- 566



## உழைப்பாளிகள்

அல்லும் பகலும் பாடுபட்டு
ஐந்து காசு உழைத்து
வீட்டில் கஞ்சிக்கு வழிசெய்யும்
உங்களின் தியாகத்தை
வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது!
எதிர்காலம் உங்கள் பெயரை
மறவாது என்பதை மறவாதீர.

தனுஜியா
கோப்பாய்

## உழைப்பின் சிகரங்கள்

துறுதுறு என உழைக்கும் மனிதா!
சிறுதூரப் பயணத்தின் சிறுத்தையாய்
இரு சில்லுக் கொண்டு
தாங்கி வந்தது ஈருருழி - உன்னை
இன்று மட்டும் அல்ல
என்றும் உன் உழைப்பையும்
தாங்கிச் செல்லும் உன்
சிறந்த நண்பனாய்

கனுசிகா
கொக்குவில்

## வைரங்கள்

உழைப்பின் உன்னதத்தை
உலகிற்குக் காட்டிய
தந்தையரே!
உங்கள் நெற்றியில் வடிவது
வியர்வைத் துளிகள் அல்ல
வைரக் கற்கள்- அது
உங்கள் உறவுகளை வாழ வைக்கும்


மாவையூர் உதிஸ்ரன்

## சுடுகாடு

எரிபொருட்களோ முயற் கொம்பு
மக்கள் கூட்டமோ வரிசையுகத்தில்
அல்லற்படுகின்ற உள்ளங்களுக்கு
நீ ஆபத் பாண்டவன் உன்றன்
பணி மகத்தான வேளையில்
இயற்கை மாதாவை கருவறுப்பது
நியாயமா? சிந்தையை தட்டிடடா
கானகத்திற்கு காவல் நல்கிடடா
தருக்கள் மேல் தண்ணளி காட்டிடு
மரங்களை மண் எங்கும் நாட்டிடு
மழையை பொழிய வழிவிட்டிடடா
அன்றில் உன்றன் மண்ணும்
சீக்கிரமே ஆகிடுமே சுடுகாடாக

தமிழ் பித்தன்

## மௌனத்தின் தேடல்- 567



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## தோள் கொடுப்போம்

போர் எம்மைப்
புடம் போட்டு
பொறுப்பாய் துணி
முயற்சி முன்னேறு
நார் நாராக நலியாமல்
நம்வாழ்வு
நானிலத்தில்
நிலைக்கவெனில்
மலையே வரினும்
தலை தாங்கி
மாளாது உயிரக்
காத்திடுவோம்
நிலை உயர நாட்டில்
பொருளாதாரம்
நலியவிடாது தோள்
கொடுப்போம்

கந்தபாலன்
காவலூர்

## வறுமை போக்கிடுவோம்

காட்டில் விறகு வெட்டக்
காத்திருக்கும் கொடும் விலங்கு
வீட்டில் அடுப்பெரிக்க தினம்
வேண்டும் விறகுப் பொறுப்பாலே கடும்
காற்றும் எதிர்க்கும் கால் மிதிக்க
பசியால் கண்ணும் இருட்டும்
வேற்று மனிதரா எம் நாட்டை
விறகு விற்று நிமித்துவரோ...
ஆற்று மனதை வறுமை போக்கிடுவோம்.

வைகதன்
கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புது நகரம்

# கடல் புறா

ஊருக்குள்ளிருந்து கோட்டை வாயில் வழியாக வண்டிகளில் இழுக்கப்பட்டு வந்து கொண்டிருந்த பெரும் மரத் தூண்கள் கடற்கரையில் உருட்டப்பட்டதன் விளைவாக ஒன்றுடன் ஒன்று மோதிய சத்தம் வேறு, தச்சர் கொல்லர் ஆயுத சத்தங்களுடன் கலந்துெ காண்டது.

விழாவுக்கு அத்தகைய நகரத்தையும் மண்டபத்தையும் நிறுவத் தனித் தனித் தூண்களையும் பலகைகளையும் அக்ஷயமுனையின் அதிகாரிகள் நிரந்தரமாகச் செய்து வைத்திருக்கிறார்களென்பதை அங்கு நடந்த வேலையிலிருந்தும் வண்டிகளில் வந்திறங்கிய மரத்தண்டுகளிலிருந்தும் இளையபல்லவன் புரிந்து கொண்டாலும் திறமையான தொழிலாளிகள் இல்லாவிட்டால் அந்தத் தயாரிப்புப் பகுதிகளை ஒன்று சேர்த்துப் பிணைப்பது அத்தனை துரிதத்தில் முடியாது என்பதையும் தீர்மானித்துக் கொண்டான்.

அந்த நிர்மாண வேலை அத்தனை துரிதமாகவும் திறமையாகவும் நடந்ததில் அவனுக்கு ஒரு திருப்தியும் இருந்தது. இத்தகைய பணியாட்களைக் கொண்டு தனது மரக்கலத்தைப் பழுதுபார்ப்பதும், அபிவிருத்தி செய்வதும் மிகவும் சுலபம் என்ற நினைப்பால் அவன் மனம் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தது.

தச்சர்கள் கடற்கரையில் அடிக்கும் ஒவ்வோர் ஆணியின் சத்தமும் அந்த ஆணி தனது மரக் கலத்திலேயே பாய்ந்து அதை உறுதிப்படுத்துவது போன்ற பிரமையை ஏற்படுத்தவே இளையபல்லவன், எதிர்நோக்கியி ருந்த ஆபத்தைக்கூட மறந்து, தான் அக்ஷ்யமுனை வந்தது சரியான காரியம் என்று தனக்குள் சொல்லிக் கொண்டு குதூகலமும் அடைந்தான்.

இப்படிப் பலவிதமாக எண்ணமிட்டுக் கொண்டும் எதிரே எழுந்த புது நகரத்தைப் பார்த்து வியப்பெய்தியும் தளத்தில் நீண்ட நேரம் நின்று கொண்டிருந்த இளைய பல்லவன் ஒரு நாழிகை கழித்துத் தனது அறைக்குச் சென்றான்.

சென்றவன் பஞ்சணையில் சாய்ந்தபடியே அன்றைய இரவு நடன நிகழ்ச்சியைப் பற்றியும் அங்கு ஏற்படக் கூடிய ஆபத்துகளைப் பற்றியும் எண்ணத் துவங்கினான். பலவர்மனும் மஞ்சளழகியும் குறிப்பிட்ட ‘அந்த நால்வர்’ வந்தால் அவர்களைச் சமாளிக்கும் வழியைப் பற்றியும் யோசித்தான். கடைசியாக என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி ஒரு முடிவுக்கும் வந்த சோழர் படைத் தலைவன் அதற்கு மேல் கவலை ஏதுமின்றிக் கரைக்குப் போவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கலானான்.

இரவு மெள்ள மெள்ள அந்தக் கடற்கரையில் தலை நீட்டிக் கொண்டிருந்தது. கதிரவனின் சாரதியான அருணன் தன் செங்கிரணங்களை இழுத்துக்கொண்டு விட்டானா? என்று முழுமதியும் வானத்தில் எட்டிப் பார்க்கத் துவங்கினான்! அந்த இன்பக் காட்சியைக் கண்ட இளையபல்லவன், “ஆகா, எத்தனை இன்பமான காட்சி! இதிலா கொலையும் கலவரமும் நடக்க வேண்டும்!” என்று தன்னைத்தானே வருத்தத்துடன் கேட்டுக்கொண்டான். மாலை வேளையில் மஞ்சள் வெயிலில் மனோகரமாகக் காட்சி அளித்த அந்தப் புது நகரம், இரவில் கண் கொள்ளாக் காட்சியாயிருந்தது.

எங்கும் பெரும் மர ஸ்தூபிகளின் மீது ஈட்டிகளில் சொருகப்பட்ட பந்தங்கள் பெரிதாக எரிந்தன. பலவகை விளக்குகளும் பல தூண்களும் பிணைக்கப்பட்டுக் காற்றில் சுடர்கள் படபடத்தன. இவற்றுக் கெல்லாம் சற்றுத் தள்ளி மேற்கு நோக்கி இருந்த நடன மண்டபம் கண்ணைப் பறித்துக்கொண்டிருந்தது. அதன் பின்னால் கிழக்கில் எழுந்த முழுமதி மண்டபத்துக்குச் சிறந்த பின்னணியையும் கடற்கரைக்குப் பெரும் சோபையையும் அளித்துக் கொண்டிருந்தது. மண்டபத்துக்கு மேற்புறக் கூரையும் பின்புறத் திரையும் அமைக்காத காரணத்தை இளையபல்லவன் நன்றாகப் புரிந்து கொண்டான். நடனத்தின் சிறப்பை, சூழ்நிலையின் அமைப்பை ரசிகனான அவனால் அப்பொழுதே புரிந்து கொள்ள முடிந்தது.

இரவு விளக்குகள் எரியத் தொடங்கிய இரண்டு நாழிகைகளுக்கெல்லாம் கோட்டைக்குள்ளிருந்து மக்கள் சாரி சாரியாக வரத் தொடங்கினார்கள். மெள்ள மெள்ள கூட்டமும் கூச்சலும் அந்தக் கடற்கரையில் பெருகலாயிற்று. கூட்டம் சற்று வலுத்ததும் ஆயுதம் தாங்கிய வீரர்கள் கோட்டைக்குள்ளிருந்து வந்து கூட்டத்தைச் சக்கர வட்டமாக உட்கார வைத்துச் சுற்றிலும் வளைந்து நின்று காவல் புரியலாயினர். இந்த ஏற்பாடுகள் ஒரு நிதானத்துக்கு வருவதற்கும் மண்டபத் தூண்களின் மறைவிலிருந்த குடிசைகளிலிருந்த கொள்ளைக் கூட்டத்தார் பெரும் கூச்சலுடன் அந்த நடன அரங்க வளையத்துக்குள் நுழைவதற்கும் சரியாகவிருந்தது. வீரர்கள் எத்தனையோ கட்டுப்பாடு செய்தும் கூச்சலும் குழப்பமும் கடற்கரையில் மண்டியே கிடந்தது.

அமீரும் கண்டியத்தேவனும் கூலவாணிகனும் அக்கம் பக்கத்தில் நிற்க, தளத்தின் மீது நின்ற வண்ணமே கடற்கரையில் குழுமிக் கொண்டிருந்த பெரும் கூட்டத்தைக் கவனித்த இளையபல்லவன், நடன விழாவில் மக்கள் பெரும் பைத்தியம் பிடித்தவர்களாயிருக்க வேண்டுமென்று தீர்மானித்தான். அத்தனை மக்களை மயக்கவும் தன் பிடியில் வைத்திருக்கவும் அக்ஷயமுனைக் காவலன் வகுத்துள்ள பல ஏற்பாடுகளில் நடன விழா முக்கியமானதாக இருக்க வேண்டுமென்ற முடிவுக்கும் வந்தான் இளையபல்லவன்.

இத்தனை பேரையும் பிரமிக்க வைக்கும் படியான எத்தகைய நடனத்தை மஞ்சளழகி ஆடப் போகிறாளென்பதையும் அவன் எண்ணிப் பார்த்தான். சில விநாடிகள் மனக் கண்ணில் அவள் சுழன்றாடும் காட்சியையும் நடன மண்டபத்தில் அவளுக்கிருக்கக்கூடிய இயற்கை வசதிகளையும் கண்டான். ‘எவனையும் மயக்கக் கூடியதாகத்தான் நடனமிருக்கும். சந்தேகமில்லை’ என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொள்ளவும் செய்தான். அவன் இத்தகைய யோசனைகளில் ஈடுபட்டிருந்த இரண்டொரு நாழிகைகளுக்குள் கடற்கரை ஜன சமுத்திரமாகக் காட்சியளித்தது.

கொள்ளைக்காரர்களும் அவர்கள் மாதர்களும் தானளித்த விதவிதமான உடைகளையும் ஆபரணங்களையும் அணிந்து சகல கட்டுப்பாடுகளையும் மீறிக் குறுக்கும் நெடுக்கும் நடப்பதையும் அவர்களை வீரர்கள் மடக்க முயன்று முடியாமல் தவிப்பதையும் கண்ட இளையபல்லவன், தான் கரை செல்ல வேண்டிய சமயம் நெருங்கவிட்டதென்று தீர்மானித்தான்.

ஆகவே பக்கத்தில் நின்ற அமீரை நோக்கித் திரும்பி, “அமீர்! நீயும் கண்டியத் தேவரும் சேந்தனும் அடுத்தபடி. உள்ள ஆறு உப தலைவர்களும் சிறந்த உடைகளை அணிந்து கொள்ளுங்கள். இந்த நிகழ்ச்சிக்கு வரும் கோட்டைத் தலைவனுக்கும் மற்றப் பிரமுகர்களுக்கும் உங்கள் உடைகளும் அணிகளும் எந்தவிதத்திலும் குறைந்த தாயிருக்கக் கூடாது. அமீர்! உனது குறுவாள்களில் நாலைந்து எடுத்துக் கச்சையில் செருகிக்கொள். அவற்றுக்குத் தேவையிருக்காதென்று நினைக்கிறேன். எதற்கும் கையில் இருப்பது நல்லது” என்று உத்தரவிட்டான். பிறகு சேந்தனை நோக்கி, “சேந்தா! நமது பொக்கிஷத்தில் இருப்பவற்றுள் சிறந்த மாணிக்க மாலை ஒன்றை எடுத்து என்னிடம் கொடு. மற்றும் ஏதாவது மாலைகள் இருந்தால் நாலைந்தைத் தனியாகக் கொடு.” என்று கூறிவிட்டு நடனக் காட்சிக்குப் புறப்படத் தன்னைச் சித்தம் செய்துகொள்ள அறையை நோக்கிச் சென்றான்.

அறைக்குள் நுழைந்ததும் அங்கு தயாராயிருந்த மாலுமியொருவன், ஏந்தி நின்ற கிண்ணத்திலிருந்த பன்னீர் கலந்த குளிர் நீரில், முகம் கழுவி, நுதலில் பிறைச் சந்திரச் சாந்தணிந்து, பெட்டியைத் திறந்து மிகவும் படாடோபமாகக் காட்சியளித்த உடைகளையும் நவரத்தினப் பிடியுள்ள குறுவாள் ஒன்றையும் எடுத்தான். சாதாரணமாகப் படாடோபத்தில் விருப்பமில்லாத கருணாகர பல்லவன் அன்று அவசியத்தை முன்னிட்டு மிகவும் படாடோபமான உடைகளையும் அணிந்தான்.

காலில் சீனத்துச் சராயும், மேலே சரிகையும் பொன்னும் மணியும் வைத்துத் தைத்த அங்கியும் இடையில் வைரங்கள் பதித்த கச்சையையும் அணிந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : மூன்று முடிச்சு
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்கள் : ஜெயச்சந்திரன், வாணி ஜெயராம்



ஆடி வெள்ளி தேடி உன்னை
நானடைந்த நேரம்
கோடி இன்பம் நாடி வந்தேன்
காவிரியின் ஓரம்
காவிரியின் ஓரம்
ஆடி வெள்ளி தேடி...

ஓரக் கண்ணில் ஊறவைத்த
தேன் கவிதைச் சாரம்
ஓரக் கண்ணில் ஊறவைத்த
தேன் கவிதைச் சாரம்

ஓசையின்றிப் கேட்குமது
ஆசை என்னும் வேதம்
ஆசை என்னும் வேதம்

ஆசை என்னும் வேதம்

வேதம் சொல்லி மேளமிட்டு
மேடை கண்டு ஆடும்
மெத்தை கொண்டு தத்தை ஒன்று
வித்தை பல நாடும்

வேதம் சொல்லி மேளமிட்டு
மேடை கண்டு ஆடும்

மெத்தை கொண்டு தத்தை ஒன்று
வித்தை பல நாடும்

நாடும் உள்ளம் கூடும் எண்ணம்
பேசும் மொழி மௌனம்
ராகம் தன்னை மூடி வைத்த
வீணை அவள் சின்னம்
வீணை அவள் சின்னம்

வீணை அவள் சின்னம்

சின்னம் மிக்க அன்னக்கிளி
வண்ணச் சிலைக் கோலம்
என்னை அவள் பின்னிக் கொள்ள
என்று வரும் காலம்

காலம் இது காலம் என்று
காதல் தெய்வம் பாடும்
கங்கை நதி பொங்கும்... கடல்
சங்கமத்தில் கூடும்
சங்கமத்தில் கூடும்

ஆ ஆ..
ஆடி வெள்ளி தேடி உன்னை
நானடைந்த நேரம்
கோடி இன்பம் நாடி வந்தேன்
காவிரியின் ஓரம்...
காவிரியின் ஓரம்

# உங்கள் வாழ்க்கையில் வளம் சேர்க்கும் தத்துவங்கள்!

**நம் அனைவருக்குள்ளும் ஒரு சிறிய கொடுங்கோலன் ஒருவன் ஒளிந்து கொண்டுதான் இருக்கிறான். சமூகக் கட்டுப்பாடுகள், அக்கம்பக்கம் இருப்பவர்கள் நாம் என்ன செய்கிறோம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணம் போன்றவையே நம்மை நல்லவர்களாக வழிநடத்திச் செல்கிறது.**

"தத்துவம் என்றாலே அதற்கும் நமக்கும் சம்பந்தம் இல்லை என்று நம்மில் பெரும்பாலானவர்கள் நினைக்கிறார்கள். ஏனென்றால், தத்துவம் குறித்து படிக்கலாம் என நினைத்தால் அதில் இருக்கும் பண்டைய கால கிரேக்க வார்த்தைகளின் கடினத்தன்மை உடனடியாக நம்மை அந்நியப்படுத்திவிடும்.

**நீதி நெறிமுறைகள்படி நடப்பது...**

உங்கள் வாழ்நாட்களில் அனைத்து தினங்களிலுமே நீங்கள் நீதி நெறிமுறையின் அடிப்படையில் முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலைகளைக் கடந்து செல்வீர்கள். நீங்கள் மற்ற மனிதர்களை பாதிக்கும்படி செய்யும் அனைத்து விடயங்களிலும் நீதி நெறிமுறையின்படி இருக்க வேண்டியிருக்கும்.

பிளாட்டோ என்னும் அறிஞர் மந்திரசக்தி கொண்ட மோதிரம் குறித்த சிந்தனை, கி.மு. 375 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'இந்த மோதிரம் கையில் கிடைத்த ஒரு மனிதன் உடனடியாக அதைத் தன்னுடைய சுயநலத்துக்காகத்தான் உபயோகிப்பான்.

இந்த மாதிரியான ஒரு சக்தி கிடைத்த ஒருவன் ஒருக்காலும் அதை சொந்த இலாபத்துக்கு பயன்படுத்த மாட்டான் என்று நீங்கள் நினைத்தீர்கள் எனில், நீங்கள் ஒரு முட்டாளேயன்றி வேறில்லை' என்றார் பிளாட்டோவின் சகோதரரான க்ளாவ்கான்.

இதுபோன்ற சக்தி உங்கள் நண்பருக்குக் கிடைத்தால் என்ன செய்வார் என்று கேட்டுப் பாருங்கள். அவ்வளவு ஏன், உங்களுக்குக் கிடைத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? இந்தக் கேள்விக்கான விடை எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். மனதார நீங்கள் திருடுவதற்கோ, மற்றவர்களுடைய இடத்தினுள் அனுமதியின்றி நுழைவதற்கோ, திண்டிப்பதற்கோ, அச்சிலேற்ற முடியாத காரியங்களைச் செய்வதற்கோ இந்த சக்தியை உபயோகிக்க மாட்டீர்கள் என்றாலும், இவற்றையெல்லாம் செய்ய முடியும் என்று மனதுக்குள் பட்டியலிடவாவது செய்வீர்கள்தானே? இந்த மந்திர மோதிரம் நமக்கு எதை உணர்த்துகிறது எனில், அதிகாரமானது (சக்தி) மனிதனை நேர்மையற்றவனாக ஆக்குகிறது என்பதைத்தானே?

அது மட்டுமல்ல, அதிகாரமே ஒருவர் எப்படிப்பட்டவர் என்பதை நமக்கு காட்டிக் கொடுக்கிறது. நம் அனைவருக்குள்ளும் ஒரு சிறிய கொடுங்கோலன் ஒருவன் ஒளிந்து கொண்டு தான் இருக்கிறான். சமூகக் கட்டுப்பாடுகள், அக்கம் பக்கம் இருப்பவர்கள் நாம் என்ன செய்கிறோம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணம் போன்றவையே நம்மை நல்லவர்களாக வழி நடத்திச் செல்கிறது.

சுருங்கச் சொன்னால், மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணமே நம்மை நல்லவர்களாக வாழச் செய்கிறது. இதனாலேயேதான் தனி மனிதனாக இருந்தாலும் சரி, நிறுவனங்களாக இருந்தாலும் சரி, கட்டுப்படுத்த சரியான அமைப்புகள் தேவைப்படுகின்றன. இவையெல்லாம் கட்டமைப்பில் இருந்தாலுமே நாடுகளின் ரகசியங்கள், கார்ப்பரேட்டுகளின் தந்திரங்கள், அரசியல்வாதிகள் சொல்லும் அழகான பொய்கள் போன்றவை எல்லாம் இந்த மந்திரசக்தி கொண்ட மோதிரத்தின் தத்துவத்தில் இருந்து உருவாகுபவைதானே?

**எது சரி, எது தவறு...?**

நாம் எல்லோருமே சரியான விடயங்களை சரியான நேரத்தில் செய்து வெற்றி பெறவே விரும்புகிறோம். மேலும், நாம் நல்லவர்களாக இருக்கவும் விரும்புகிறோம். பிளாட்டோவின் மாணவரான அரிஸ்டோட்டில் இந்தக் கேள்விகளுக்கான விளக்கத்தைத் தந்துள்ளார். யாருக்கும் தீமை இல்லாததை செய்வது, சரியான நேரத்தில் சரியான விடயங்களைச் செய்வது என்பதெல்லாம் நாம் எந்தளவுக்கு நல்லவர்களாக இருக்கிறோம் என்பதில் இருந்தே அமைகிறது என்கிறார் அரிஸ்டோட்டில்.

தொடர் பயிற்சிகளாலும் வெற்றி பெற்றவர்களுடைய பாதையைத் தொடர்ந்து பின்பற்றுவதாலும் நாம் எடுத்த காரியங்களில் வெற்றி பெறுவதற்கான கலையை முழுமையாகக் கற்றுக்கொள்ளலாம். நீங்கள் கருணை கொண்ட



மனிதராக இருக்க விரும்புகிறீர்களா? கருணை கொண்ட காரியங்களை அடிக்கடி செய்யுங்கள். மன்னிக்கும் பண்பு உங்களிடத்தில் அதிகரிக்க வேண்டுமா? மன்னிக்கும் குணம் அதிகம் கொண்டிருக்கும் நபர் ஒருவரை முழுமையாகப் பின்பற்றி அவர் மாதிரி நடந்து கொள்ளுங்கள். ஏனென்றால், நீங்கள் மனதார நம்பிச் செய்யும் விடயமாகவே நீங்கள் மாறிப் போவீர்கள் என்பதுதான் உலக நியதி.

நாம் செய்யும் விடயங்களே நாம் யார் என்பதை நிர்ணயிக்கிறது என்பது சரி எனில், சிறப்பானதொரு நபராக இருப்பது ஒரு முறை செய்யும் காரியத்தால் வருவதில்லை. அதுவே பழக்கமாக மாறிப் போனால் மட்டுமே சாத்தியம் என்கிறார் ஆசிரியர்.

என்னதான் இருந்தாலும் குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் எதைச் செய்வது சரியாக இருக்கும் என்பதைக் கண்டறிவது கடினமான விடயம். எல்லா முடிவுகளும் தனிப்பட்ட குணாதிசயங்களைக் கொண்ட ஒன்றாகவே (Unique) இருக்கிறது.

ஒரு சூழலில் துணிச்சலான முடிவாகத் தெரியும் ஒரு விடயம், மற்றொரு சூழலில் அப்படித் தெரிவதில்லை. இதனால்தான் நல்லது என்பது இரு நேரெதிரான விடயங்களின் (extreme) நடுவே இருப்பது என்கிறார் அரிஸ்டோட்டில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவிமர்சனம் யானை




யானை ஊரில் செல்வாக்காக வாழ்ந்து வரும் பி.ஆர்.வி குடும்பத்தின் இளைய மகன் அருண் விஜய். இவர் குடும்பம் மீதும் அண் ணன்கள் சமுத்திரகனி, போஸ் வெங்கட், சஞ்சீவ் மீதும் அதிக பாசத்துடன் இருக்கிறார். இவர்கள் குடும்பத்திற்கும் ஜெயபாலன் (சமுத் திரம்) குடும்பத்திற்கு தீராத பகை இருந்து வருகிறது. சமுத்திரம் குடும்பத்தை சேர்ந்த இராமசந்திர ராஜு, அருண் விஜய் குடும்பத்தை அழிக்க நினைக்கிறார்.

இந்நிலையில், அருண் விஜய்யின் அண்ணன் மகள் அம்மு அபிராமி, காதலுடன் ஓடி செல்கிறார். இதற்கு காரணம் அருண் விஜய் தான் என்று கூறி வீட்டை விட்டு வெளியே அனுப்புகிறார்கள். இறுதியில் அருண் விஜய் குடும்பத்துடன் இணைந்தாரா? இராமசந்திர ராஜு விடம் இருந்து குடும்பத்தை காப்பாற் றினாரா? என்பதே படத்தின் மீதிக்கதை. படத்தில் நாயகனாக நடித்திருக்கும் அருண் விஜய் ஆக்ரோஷமான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார்.

தாய் பாசம், அண்ணன் பாசம், அண்ணன் மகள் பாசம், காதல் என அனைத்தையும் தாங்கி சுமந்து இருக்கிறார். ஆக்ஷன் காட்சிக ளில் அதகளப் படுத் தி இருக்கிறார். கதாநாயகியாக நடித்திருக்கும் பிரியா பவானி சங்கர் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். ஆனால், நடனம் ஆடத்தான் கஷ்டப்பட்டிருக்கிறார்.

தனக்கே உரிய பாணி யில் அசத்தி இருக கிறார் சமுத்திரகனி. அதுபோல் ராதிகா சரத்குமார் அனுபவ நடிப்பை கொடுத்து இருக்கிறார். வில்லத்தனத்தில் மிரட்ட முயற்சி செய்திருக்கிறார் இராமசந்திர ராஜு. ராஜேஷ், ஜெயபாலன், போஸ் வெங்கட், சஞ்சீவ், அம்மு அபிராமி, ஐஸ்வர்யா ஆகியோர் கொடுத்த வேலையை சிறப்பாக செய்திருக் கிறார்கள்.

ஒரு சில இடங்களில் சிரிக்கவும், ஒரு இடத்தில் அனுதாபத்தையும் ஏற்படுத்தி இருக் கிறார் யோகி பாபு. தன்னுடைய வழக்கமான ஸ்டைலில் படத்தை இயக்கி இருக்கிறார் ஹரி. கமர்ஷியல் படங்களுக்கு தேவையான அனைத்தையும் கொடுத்து ரசிக்க வைத்து இருக்கிறார்.

காதல், அப்பா மகள் பாசம், அண்ணன் பாசம், தாய் பாசம், என குடும் பத்தினர் கவரும் வகையில் உருவாக்கி இருக்கிறார் ஹரி. அதுபோல் வசனங்களும் படத்திற்கு பலம் சேர்த்து இருக்கிறது. வேகமாக நகரும் திரைக கதையில், ஒரு சில காமெடி காட்சிகளும், பாடல்களும் தடையாக அமைந்து இருக்கிறது.

ஜி.வி.பிரகாஷ் இசையில் பாடல்கள் பெரிதாக ஒர்கவுட் ஆகவில்லை. ஆனால், பின்னணி இசையில் அதிக ஸ்கோர் செய்திருக்கிறார். குறிப்பாக சண்டை காட்சிகளுக்கு வரும் பின்னணி இசையில் மாஸ் காண்பித்து இருக்கிறார்.

எஸ்.கோபிநாத்தின் ஒளிப்பதிவு படத்திற்கு பலம் சேர்த்து இருக்கிறது. மொத் தத்தில் 'யானை' பலம்.

# புன்னகையரசி



வாழ்க்கை குறிப்பு

கே. ஆர். விஜயாவின் தந்தை ராமசந்திரன் ஆந்திர பிரதேசத்தையும், தாயார் கல்யாணி கேரளாவையும் சேர்ந்தவர்கள். இவர் கேரளாவில் உள்ள திருச்சூரில் தெய்வ நாயகி என்ற இயற்பெயர் உடன் முதல் மகளாக பிறந்தார். இவருக்கு வத்சலா, சாவித்திரி, சசிகலா, ராதா, என்கிற நான்கு தங்கைகளும் நாராயணன் என்கிற ஒரு தம்பியும் உள்ளனர். இவர் தந்தை திருவனந்தபுரத்தில் நகை வியாபாரம் செய்து வந்தார். பின்பு நகை வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டத்தால், பின்பு தமிழ் நாட்டில் உள்ள பழநி முருகன் கோவிலில் இவரது தந்தை ராமச்சந்திரன் கோவில் அலுவலராக பணியாற்றும் போது கே. ஆர். விஜயா குடும்பம் பழநியில் குடியேறியது.

மேலும் இங்கு தான் கே. ஆர். விஜயா அவர்களுக்கு தனது விருப்ப கடவுளான முருகன் மீதும் தனது வாழ்க்கையை தீர்மானித்த நாடக நடிப்பின் மேல் உள்ள ஆசையும் வளர தொடங்கியது.

ஆரம்ப காலத்தில் நாடகக் குழுவிலும் சில மேடை நாடங்களில் நடித்து வந்த இவர் திரைக்கு வந்த பிறகு நடிகர் எம். ஆர். ராதாவால் விஜயா என்று அவரது பெயரை மாற்றி வைத்தார். இதை தனது தாய்ஃதந்தை யின் முதல் எழுத்தை சேர்த்து கே.ஆர். விஜயா என்று மாற்றி கொண்டார். இவர் 1960 களில் நடிக்கத் தொட ங்கி சுமார் 40 ஆண்டுகளுக்கு அதிக மாக நடித்து வருகிறார். இவர் நடித்த முதற் படமான கற்பகம் 1963 இல் வெளி வந்தது.

எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், ஜெமினிகணேசன், எஸ். எஸ். ராஜேந்திரன், முத்துராமன், ஏ. வி. எம் ராஜன், ஜெய்சங்கர், ரவிசந்திரன், ஆகிய பிரபல நடிகர்களுடன் சேர்ந்து நடித் தார். அது மட்டுமல்லாமல் தமிழ் திரையில் இவர் நடித்த ஆரம்பகாலத்தில் பல வில்லன் நடிகர்களான ஆர்.எஸ்.மனோகர், எஸ்.ஏ.அசோகன், கே. பாலாஜி, ஆகியோருடன் கதாநாயகி ஆகவும் நடித்துள்ளார். பின்பு நகைச் சுவை நடிகர்களான நாகேஷ், சோ, தேங்காய் ஸ்ரீனிவாசன், ஆகியோரு டனும் இணைந்து சில படங்களிலும் நடித்துள்ளார்.

தமிழ்திரையில் அறிமுகம் ஆகினாலும் மலையாளம், தெலுங்கு, கன்னடம், படங்களிலும் பல உச்ச நட்சத்திர நடிகர்களுடன் ஜோடியாக இணைந்து நடித்துள்ளார். தமிழில் விஜயபுரி வீரன் ஆனந்தன் முதல் எல்.ஐ.சி. நரசிம்மன் வரை இணைந்து நடித்த நடிகை ஆவார். பின்பு தற்போது தமிழில் பல சின்னத்திரை நாடகங்களிலும், விளம்பரங்களிலும் நடித்து வருகிறார். இவர் திரைக்கு வந்த சில காலங்களிலே 1966 ஆம் ஆண்டு அன்றைய பிரபல திரைப்பட தயாரிப்பாளரும், தொழிலதிபருமான சுதர்சன் எம். வேலாயுதம் நாயர் என்பவரை காதல் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ஹேமலதா என்கிற ஒரு மகள் உள்ளார்.


# சூரியாவுக்கு ஆஸ்காரில் இருந்து வந்த அழைப்பு

திரையுலகில் மிகவும் உயரிய விருதாக கருதப்படுவது ஆஸ்கர் விருது. ஆஸ்கர் உறுப்பினர் குழுவில் உலகம் முழுவதும் இருந்து நான்காயிரத்திற்கும் அதிகமான உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்த விருது வழங்கும் விழா ஆண்டுதோறும் நடத்தப்பட்டு பல பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் ஆஸ்கர் கமிட்டியின் உறுப்பினர் விவரம் மாறுபடும்.

இந்நிலையில், ஆஸ்கர் விருது உறுப்பினர் குழுவில் புதிதாக 397 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். நடிகர்கள், இயக்குனர்கள், ஆடை வடிவமைப்பாளர்கள் என பல்வேறு துறைகளில் இருந்து தேர்வு நடைபெற்றுள்ளது.

இதில் இந்தியாவில் இருந்து நடிகர் சூர்யா, நடிகை கஜோல் ஆகியோர் ஆஸ்கர் குழுவில் உறுப்பினர்களாக தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.



இந்த செய்தியானது ரசிகர்களை உற்சாகப்படுத்தியுள்ளது. மேலும், புதிய உறுப்பினர்கள் ஆஸ்கர் பட்டியலுக்கான திரைப் படங்களை தேர்வு செய்ய வாக்களிக்கும் உரிமை பெறுவார்கள்.

நடிகர் சூர்யாவின் சூரரைப் போற்று மற்றும் ஜெய்பீம ஆகிய திரைப்படங்கள் ஆஸ்கர் விருது போட்டியில் பங்கெடுத்தது குறிப் பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தின் அதிசயங்கள் பகுதி II

**விவேகானந்தர் பாறை**

அதன் ரம்மியமும், அலை வந்து மோதிய பேரழகும் அவரை ஈர்க்க, அங்கேயே மூன்று நாட்கள் தியானத்தில் அமர்ந்து விட்டார். அவர் தியானித்த பாறை என்பதால் விவேகானந்தர் பாறை என்றே பின்னர் அழைக்கப்படுகிறது.

1972 ஆம் ஆண்டு விவேகானந்தரின் நினைவாக ஒரு நினைவு மண்டபம் கட்டப்பட்டது. அதனருகில் திருவள்ளுவரின் உயரமான சிலை பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது. தனது ஆன்மிக உரையால் அமெரிக்கர்களையும், உலக ஆன்மிகவாதிகளையும் ஈர்த்த விவேகா-ந்தரையே கவர்ந்த அந்தப் பாறை தமிழகத்தின் அர்த்தமுள்ள அதிசயம்.

**பாம்பன் பாலம்**

பாம்பன் பாலம் இராமேஸ்வரத்தையும் இந்தியப் பெருநில பரப்பையும் இணைக்கும் கடற் பாலமாகும். இந்தியாவின் இரண்டாவது மிகப் பெரிய இக்கடற்பாலத்தின் நீளம் 2065 கி.மீ. (முதலாவது பாலம் மஹாராஷ்டிராவின் பாந்த்ராவையும், வொர்லியையும் இணைக்கும் பாலம்).

1913 ஆம் ஆண்டு கட்டத் தொடங்கப்பட்டு 18 மாத கடும் உழைப்பிற்குப் பின் பொது மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து விடப்பட்டது. இந்த பாலத்தின் இருபுறமும் உள்ள தூண்களின் உயரம் 220 அடி ஆகும். பாலத்தின் இடையே கப்பல்கள் செல்ல ஏதுவாக குறுக்கே பாலத்தின் பகுதிகள் இரண்டாகப் பிரிந்து உயரே தூக்குவது போல அமைக்கப்பட்டுள்ளதால் இதற்கு ராட்டின பாலம் என்றும் பெயருண்டு. பாலத்தின் குறுக்கே மாதம் 10 இற்கும் மேற்பட்ட கப்பல்கள் பயணிக்கின்றன.



ஆதிச்சநல்லூர் தொல்லியல் பகுதிகள்

**ஆதிச்சநல்லூர் தொல்லியல் பகுதிகள்**

திருநெல்வேலியிருந்து திருச்செந்தூர் செல்லும் வழியில் 24 ஆவது கி.மீற்றரில் திருவைகுண்டம் வட்டத்தில் அமைந்துள்ளது ஆதிச்சநல்லூர். இங்கு நடத்தப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் மூலம் கிடைத்த பொருட்களின் வழியே தமிழர்களின் தொன்மைமிக்க வாழ்வியல் கூறுகளை அறிய முடிகிறது.

1876 முதற்கொண்டே அங்கு நடக்கும் அகழ்வராய்ச்சியில் கிடைத்த முதுமக்கள் தாழிகள், பயன்படுத்திய கலைத்தன்மை மிளிரும் அணிகள் ஆகியன இன்றைக்கும் தொல்லியல் அறிஞர்கள் கிடைத்தற்கரிய பொக்கிஷமாகக் கருதப்படுகின்றன.

சுமார் 114 ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்ட ஆதிச்ச நல்லூர் அகழ்வாய்வுகள் பற்றி பிரிட்டிஷ் தொல்லியல் நிபுணர் அலெக்சாண்டர் ரியா தனது குறிப்புகளில் தென்னிந்தியாவின் மிகப்பரந்த தொல்லியல் களம் இது எனப் பதிவு செய்துள்ளார்.

ஜேர்மனிய நிபுணர் ஜாகோர் இங்கு நிகழ்த்திய ஆய்வுகளில் கிடைத்த சில பொருட்களை மேற்கொண்டு ஆய்வு செய்ய பெர்லினுக்கும் பிரெஞ்சு தொல்லியல் அறிஞர் லூயி லாம்பெர்க் இன்னும் சில பொருட்களை பாரிசுக்கும் எடுத்துச் சென்றதாக சொல்லப்படுகிறது.

(தொடரும்...)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2654

**ரஸனிகா**

நல்லது எது? கெட்டது எது?
என்பதை யார் சொன்னாலும்
அனைவரின் கூற்றையும்
நீ நம்பலாம்... ஆனால்
ஆராய மட்டும் மறந்து விடாதே...
உன் சுய சிந்தனையை
முடக்கி விடாதே...

**காந்தன்**

உதவி செய்து பழகியவர்களுக்கு யாரிடமும்
உதவி கேட்க மனமிருப்பதில்லை



உதவி வாங்கி பழகியவர்களுக்கு யாருக்கும்
உதவி செய்ய மனமிருப்பதில்லை

**நிலக்ஷி**




**கீர்த்திகன்**

மனைவியை அடித்தவுடன் அழுது கொண்டு
அம்மா வீட்டுக்கு போனால்
அன்றையிலிருந்து அவங்க நமக்கு அடிமை



வெளக்காமறையோ, பூரி கட்டடையையோ
எடுத்து திருப்பி அடிச்சாங்க என்றால்
அன்றையிலிருந்து நாம அவங்களுக்கு அடிமை

**பாமினா**

கடினமான
பாதைகள்
தான்
அழகான
இடங்களுக்கு
அழைத்துச்
செல்கிறது...

**பவி**

ஏழை உதவி செய்தால் உலகத்திற்கு தெரிவதில்லை
பணக்காரன் உதவி செய்தால்
உலகத்துக்கே தெரியும்



ஏழை செய்வது உதவி
பணக்காரன் செய்வது விளம்பரம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல்

297

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# இளம் தேங்காய்களைப் பறிப்பது விளைச்சலை அதிகரிக்கும்



வீட்டில் உள்ள தென்னை மரங்களில் முற்றாத முட்டுக்காய் தேங்காய்களை பறிப்போம் ஆயின் தென்னை காய்க்கும் வீதம் அதிகமாகும். அத்துடன் முட்டுக்காய்த் தேங்காய்கள் முற்றிய தேங்காய்களிலும் பார்க்க உடல் ஆரோக்கியத்திற்குச் சிறந்தது.


பலவிதமான ஊட்டச்சத்துக்களையும் புரதத்தையும் கனியுப்புக்களையும் கொண்டிருக்கும் முட்டுக்காய்த் தேங்காய்களில் முற்றிய தேங்காய்களிலும் பார்க்க கொழுப்பின் அளவு மிகவும் குறை



வாகவே காணப்படுகிறது. எனவே இவை இலகுவில் சமிபாடையக் கூடியதாக இருக்கிறது. இதனால் இதனை நோயாளர்களும் பயன்படுத்தலாம். முட்டுக்காய்த் தேங்காய்களில் கொலஸ்ரோல் இல்லை. தாவர உணவுகளில் பொதுவாக கொலஸ் ரோல் காணப்படுவதில்லை. ஆனால் சில வகையான தாவர உணவுகள் உடலினுள் சென்று உடலின் கொலஸ் ரோல் கொழுப்பு வீதத்தை கூட்ட வல்லன.

எனவே கொழுப்பு அதிக முள்ள தாவர உணவு வகையைக் குறைத்துக் கொள்வது நல்லது. இந்த வகையில் முட்டுக்காய்த் தேங்காய்களுக்கு கொலஸ்ரோலையும் உடல் நிறையையும் அதிகரிக்கச் செய்யும் தன்மை குறையும்.

முட்டுக்காய்த் தேங்காய்களிலிருந்து கிடைக்கும் இளநீர் குடிப்பதற்கு ஒரு பாதுகாப்பான பானமாகும். இது இயற்கையான ஊட்டச்சத்துள்ள இரசாயனப் பதார்த்தங்கள் சேர்க்கப்படாத ஒரு நல்ல பாணம் ஆகும். இதனை பலர் பாவிக்காமல் வெளியே ஊற்றி விடுகின்றனர். இது தவிர்க்கப்பட வேண்டும். பல்வேறுபட்ட விளம்பரங்களுடன் விற்பனையாகும் சோடா வகைகளுடன் ஒப்பிடும் பொழுது இளநீரை அருமருந்து என்று கூடச் சொல்லலாம். எனவே எமது வீட்டுத் தோட்டங்கள் தோறும் இரண்டு தென்னங்கன்றுகளையாவது நாட்டி பயன் பெறுவோம்.



Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**உயர் குருதியமுக்கத்திற்கான மாத்திரைகளை நிறுத்திக் கொள்வது சாத்தியமா? உயர் குருதியமுக்கத்திற்கான மாத்திரைகளை பாவிக்க ஆரம்பித்தால் எதிர்காலத்தில் அதனை நிறுத்திக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா?**

ஆம்: நிறுத்திக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. உதாரணமாக அதிகரித்த உடல் நிறை உடையவர்கள் நிறைகுறைப்பு செய்யும் பொழுது இது சாத்தியமாகின்றது. சிலர் சிறுநீரக நோய் நிலைகள் கட்டுப்பாட்டுக்கு வரும் பொழுதும் இது சாத்தியமாகின்றது.

பிரசவ காலத்தில் தற்காலிக உயர்குருதியமுக்க நிலை ஏற்படுபவர்களுக்கு பிரசவத்தின் பின்னர் இதற்கான மருத்துங்களை நிறுத்தக்கூடியதாக இருக்கிறது. உயர் குருதியமுக்க நிலை உள்ளவர்கள் தமது வாழ்க்கை முறைகளை மாற்றி ஒழுங்கான உடற்பயிற்சி, உணவு முறைகளில் மாற்றம், மன அமைதி வழிமுறைகள் போன்றவற்றை கடைப்பிடித்து வருவார்களாக இருந்தால் அவர்களின் மருந்துகளின் அளவை குறைத்து சில சமயங்களில் நிறுத்திக் கொள்ளக் கூடிய நிலைகளும் ஏற்படலாம்.



சில ஓமோன் சம்பந்தமான பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு அவர்களின் அடிப்படை நோய் நிலை கட்டுப்பாட்டுக்கு வரும் பொழுது அதிகரித்த குருதி அமுக்க நிலையும் தானாகக் குறைந்து விடும். இவர்களுக்கான மருந்துகளையும் நிறுத்திக் கொள்ள முடியும்.

உயர் குருதியமுக்கம் உள்ளவர்கள் தன்னிச்சையாக தாமாக இதற்கான மருந்துகளை நிறுத்திக்கொள்வதோ மாற்றிக்கொள்வதோ ஆபத்தானது. மருத்துவக்குழுவின் ஆலோசனையுடனேயே இவை செயற்படுத்தப்பட வேண்டும்.

உயர்குருதியமுக்கத்திற்கான மாத்திரைகளை பாவிக்க ஆரம்பித்தால் அதனை நிறுத்த முடியாது. எனவே அதனை பாவிக்காமலே இருந்து விடுவோம் என்று எண்ணிக்கொள்வது ஒரு தவறான ஆபத்தான சிந்தனையாகும்.

ஒருவரின் குருதியமுக்கம் அதிகரித்துக் காணப்பட்டால் அதனை கட்டுப்படுத்துவதற்கு மாத்திரைகளின் பங்கு மிக முக்கியமானதாகும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மியன்மாருக்கு 6 மில்லியன் தடுப்பூசிகளை வழங்கும் இலங்கை

(கொழும்பு)

மியன்மாருக்கு 6 மில்லியன் பைசர் தடுப்பூசிகளை வழங்க இலங்கை முடிவு செய்துள்ளது. இது தொடர்பான ஒப்பந்தம் அடுத்த வாரம் கைச்சாத்திடப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலையீட்டில் இந்த நன்கொடை வழங்கப்படவுள்ளது.

கொவிட்-19 வைரஸை கட்டுப்படுத்த இலங்கையில் கொள்வனவு செய்யப்பட்ட பைசர் தடுப்பூசி மருந்துகள் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் காலாவதியாகவுள்ளது. இந்நிலையில் இவ்வாறானதொரு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கு 20 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் உள்ள விலங்குகளுக்கு தேவையான உணவைப் பெற்றுக்கொள்ள 20 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் 100 வகையான பாலூட்டிகள், 110 வகையான பறவையினங்கள், 65 வகையானமீன்கள், 34 வகையான ஊர்வன, 3 வகையான ஈருடக வாழிகள், 30 வகையான பட்டாம் பூச்சிகள் மற்றும் 10 வகையான கடல்வாழ் உயிரினங்கள் உள்ளன.

இவற்றுக்கு அடுத்த 5 மாதங்களுக்குத் தேவையான உணவைப் பெற்றுக் கொள்வதற்காக 20 மில்லியன் ரூபாய் வரை நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-6)


## விவசாய நிலம் தேவை

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள இயக்கச்சி, முகாவில், காட்டுப்பாக்கம், பணிக்கையடி, கொற்றாண்டார்குளம், மாசார் போன்ற இடங்களில் மண்வளமும், நீர்வளமும் உள்ள மேட்டு நிலம் 3-5 ஏக்கர் வரை விவசாயத்திற்கு உரிய நிலம் தேவை.

(C-1754) QUICK ADS

தொடர்பு கொள்ளவும்: திரு.ரவீந்திரன்

**0772 078 455**



## சொர்க்கம் திருமண சேவை

1984 பிறந்த பூர நட்சத்திரம் விவாகரத்து ஆன கனடாவில் வசிக்கும் மணமகளுக்கு படித்த (Degree) மணமகன் தேவை.

1983 பிறந்த உத்தராட நட்சத்திர கனடாவில் வசிக்கும் மணமகனுக்கு இலங்கையில் அழகான மணமகள் தேவை.

1972 பிறந்த பரணி நட்சத்திர ஆசிரியராக பணிபுரியும் மணமகனுக்கு உள்நாட்டில் படித்த மணமகள் தேவை

**தொடர்பு கொள்ள : சொர்க்கம் திருமண சேவை**
**001 416 666 1855**
**077 887 6969**

(12050)



## நிர்வாக உத்தியோகஸ்தர் தேவை

இயக்கச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ மஹாகாளி அம்மன் ஆலயத்தை முறைப்படி நிர்வாகிக்க கல்வித் திறமையும் சமூக சேவை மனப்பான்மையும் உள்ள இந்து மதத்தை சார்ந்த ஆண் அல்லது பெண் உத்தியோகஸ்தர் தேவை.

இயக்கச்சி சுற்று வட்டாரத்தில் இருப்பவர்கள் விண்ணப்பிக்கவும்.

தகுந்த ஊதியத்துடன் முகாமைத்துவ சபையின் அங்கத்துவமும் வழங்கப்படும்.

QUICK ADS

**தொடர்பு கொள்ளவும்**
பெயர் : திரு. ரவீந்திரன்
மின் அஞ்சல் : md@isfindustries.com
தொலைபேசி : **077 207 8455**
அல்லது தபாலில் : 3/4 Rockwood place, Colombo - 7

(C-1755)



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 29 சூரி 12 செவ் 2 இல்<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்: A/L பிரான்ஸ் PR இல்லை<br>எதிர்பார்ப்பு:நற்பண்புள்ள பெண்<br>தொ.இ: B/10108 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா:63 ½ சூரி 6 செவ் 7 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்:BBA பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: உள்நாட்டு படித்த ஆண்<br>தொ.இ:G/10463 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருகோணம்<br>கி.பா: 32 சூரி 11 செவ் 10<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்: A/L சொந்தக்கடை<br>எதிர்பார்ப்பு: காரைநகர் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/10110 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 15 ½ சூரி. செவ் 2 இல்<br>உயரம்: 153 cm<br>தகைமை/தொழில்:B.A Following<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/10465 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>கி.பா:11 ½ சூரி 9 செவ் 2<br>தகைமை/தொழில்: மின்சாரம் சம்மந்தப் பட்டவேலை<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10113 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: சூரி 1 செவ் 3 இல்<br>உயரம் : 5' 6"<br>தகைமை/தொழில்:L.L.B சட்டத்தரணி (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி. லண்டனில் பிறந்தவர் விரும்பத்தக்கது.<br>தொ.இ:G/10472 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம் : மிருக சீரிடம் 4<br>கி.பா: சூரி 10 செவ் 11 இல்<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: BScஆசிரியர்<br>எதிர்பார்ப்பு : அரச தொழில் ஆசிரியர் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/10122 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 20 ½ சூரி 5 செவ் 7 இல்<br>உயரம் : 163 cm<br>தகைமை/தொழில்: A/L (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்தபெண்<br>தொ.இ:G/10485 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**



உ
சிவமயம்

## திருக்கேதீஸ்வரம் 'சிவபூமி பாலாவி மடம்' அங்குரார்ப்பண வைபவமும் சிவபெருமான் திருவுருவச் சிலை திறப்பு விழாவும் அழைப்பிதழும்



**காலம்: 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.05 மணி**
**இடம் : திருக்கேதீஸ்வரம் பிரதான வீதி, மன்னார்.**
**தலைவர் : செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு திருமுருகன் அவர்கள் (தலைவர், சிவபூமி அறக்கட்டளை)**

சிவனடியார்கள் அனைவருக்கும் வணக்கம்

இலங்கை சிவபூமி அறக்கட்டளை நிர்வாகத்தால் உருவாக்கப்பட்ட சுமார் 16 அடி உயரமான சிவன் உருவச்சிலையை திறந்து வைக்கும் வைபவத்திலும், எம்து அறக்கட்டளையினரால் பாலாவி தீர்த்தக்கரைச் சந்தியில் அமைக்கப்பட்ட நல்லைநகர் நாவலர் பெருமானின் திருவுருவச் சிலையை திறந்து வைக்கும் புனித வைபவத்திலும் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

### நல்லைநகர் நாவலர் பெருமானின் திருவுருவச்சிலை திறப்பு விழா

**காலம்:**
**03.07.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி**
**இடம் :**
**திருக்கேதீஸ்வரம் பாலாவி தீர்த்தக்கரைச் சந்தி.**



**சிவபூமி தலைமை அலுவலகம்,**
**கோண்டாவில், யாழ்ப்பாணம்.**
**தொ.பேசி : 021 222 7938**

(12047)

**சிவபூமி அறக்கட்டளை,**
**இலங்கை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு பாதுகாப்பு வேலைத்திட்டம் கிளிநொச்சியில் ஆரம்பித்து வைப்பு



(அக்கராயன்)

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியை தணிக்கும் நோக்குடன் கிளிநொச்சி மாவட்டத்தில் உணவுப்பாதுகாப்பு வேலைத்திட்டத்தை கரைச்சி, பச்சிலைப் பள்ளி, பூநகரி பிரதேச சபைகள் ஆரம்பித்துள்ளன.

வீட்டுத் தோட்டம், கோழி வளர்ப்பு எனப் பல்வேறு தேவைகளுக்கு பிரதேச சபைகள் உதவிகள் வழங்க உள்ளன. வீட்டுத் தோட்டங்கள் மூலம் உணவு பாதுகாப்பினை அதிகரித்துக் கொள்வதே இதன் முக்கிய நோக்கமாகும்.

UNDP நிறுவனத்தின் நிதி பங்களிப்புடன் குறித்த வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ் வேலைத்திட்டத்திற்காக பூநகரி பிரதேச சபைக்கு 9 இலட்சமும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு 8 இலட்சத்து 40 ஆயிரமும் கரைச்சி பிரதேச சபைக்கு 10 இலட்சத்து 60 ஆயிரமும் காசோலைகள் குறித்த நிறுவனத்தால் வழங்கப்பட்டன. (4-6-350)

# வவு. பிரதேச செயலக உத்தியோகத்தர் மீது தாக்குதல் முயற்சி

(குருமன்காடு)

வவுனியா, 4 ஆம் கட்டை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஒன்லைன் பதிவு நடவடிக்கையை ஒழுங்குபடுத்தி மேற்கொண்ட பிரதேச செயலக உத்தியோகத்தர் மீது தாக்குதல் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது, வவுனியா, 4 ஆம் கட்டை ஐ.ஓ.சி. நிறுவனத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் விநியோகம் கடந்த இரு தினங்களாக இடம்பெற்றது.

இதன்போது நபரொருவர் தனது மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் நிரப்ப வந்த போது குறித்த நபர் ஏற்கனவே எரிபொருள் நிரப்பியதாக தெரிவித்து அங்கு கடமையில் இருந்த பிரதேச செயலக உத்தியோகத்தர் திருப்பி அனுப்பியிருந்தார். இதனையடுத்து, கடமை முடிந்து குறித்த உத்தியோகத்தர் எரிபொருள் நிரப்பு நிலையத்தை விட்டு தனது மோட்டார் சைக்கிளில் வெளியேறிய போது அவ் உத்தியோகத்தரை முற்றுகையிட்ட சிலர் அவரை தகாத வார்த்தையால் பேசி தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்தனர்.

இதன்போது குறித்த உத்தியோகத்தர் அவர்களிடம் இருந்து மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றிருந்தார். (4-6-250)

# உரத்தை நம்பி ஏமாற்றமே மிச்சம்

## குடமுருட்டி விவசாயிகள்



(தர்மபுரம்)

குடமுருட்டி குளத்தின் கீழ் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் யூரியா உரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் சிறுபோகத்தை ஆரம்பித்த நிலையில் தற்போது தாம் ஏமாற்றம் அடைந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.


குடமுருட்டி குளத்தின் கீழ் 336 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது அறுவடை ஆரம்பித்த நிலையில் கடந்த காலபோகத்தை விட விளைச்சல் குறைந்துள்ளதாகவும் தமக்கு எந்த வகையிலும் இலாபம் இல்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஒரு ஏக்கருக்கு அறுவடை செய்வதற்கு 25,000 ரூபாய் செலவாகிறது.

ஒரு ஏக்கருக்கு 35 மூடைகள் பெறும் நிலத்தில் 22 மூடைகளும் சில வயல் நிலங்களில் அதுவும் கிடைப்பதில்லை எனவும் தெரிவித்தனர். (4-6-316)

# சட்டவிரோதமான முறையில் கிளிநொச்சியில் எரிபொருள் விற்பனை

- 850 லீற்றர் டீசல், 950 லீற்றர் மண்ணெண்ணெய் மீட்பு
- ஒருவர் கைது



(தர்மபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கரடிப்போக்கு சந்திப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் எரிபொருள் விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் சிறப்பு பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் மெதவலவினால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமையவே நேற்று சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் 850 லீற்றர் டீசலும் 950 லீற்றர் மண்ணெண்ணெய் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதோடு சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் தடயப் பொருட்கள் அனைத்தும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்றம் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சகர் மேதவேல தெரிவித்தார். (4-6-316)

# சிவபூமி பாலாவி மடம் அங்குரார்ப்பணமும் சிவபெருமான் சிலை திறப்பு விழாவும்



(குப்பிழான்)

சிவபூமி அறக்கட்டளை நிர்வாகத்தின் ஏற்பாட்டில் சிவபூமி பாலாவி மடம் அமைப்பதற்கான அங்குரார்ப்பண வைபவமும் தென்னிந்தியப் பிரபல சிற்பக் கலைஞர் புருசோத்தமனால் நிர்மாணிக்கப்பட்ட சுமார்-27 அடி உயரமான சிவன் திருவுருவச் சிலை மற்றும் நந்தியெம் பெருமானின் திருவுருவச் சிலைகளைத் திறந்து வைக்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.05 மணிக்கு மன்னாரில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரம் பிரதான வீதியில் இடம் பெற உள்ளது. அதனைத் தொடர்ந்து மேற்படி அறக்கட்டளையினரால் பாலாவித் தீர்க்கரைச் சந்தியில் அமைக்கப்பட்ட நல்லை நகர் நாவலர் பெருமானின் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணியளவில் திருக்கேதீஸ்வரம் பாலாவித் தீர்த்தக் கரைச் சந்தியிலும் நடைபெறும். சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகனின் தலைமையில் மேற்படி நிகழ்வுகள் இடம்பெறும். (4-6-18)



காங்கேசன்துறை-கிளிநொச்சிக்கான விசேட புகையிரத சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக புகையிரத திணைக்கள போக்குவரத்திற்கு பொறுப்பான பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன நேற்று கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு விஜயம் மேற்கொண்டு கிளிநொச்சி புகையிரத நிலையப் பொறுப்பதிகாரியோடு சந்தித்து கலந்துரையாடினார்.

(படம்: தேவானந்தன்)



மன்னார் மடுத் திருத்தலத்தின் திருவிழா கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நவநாள் ஆராதனைகளை தொடர்ந்து நேற்று காலை திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் மற்றும் குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். (படங்கள்-ஜோசப்நயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கும் உதவி செய்யாதவர்கள் பிறர் உதவியை எதிர்பார்க்க முடியாது.
- ஈசாப்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மதவாதமும் இனவாதமும் நாட்டை என்ன செய்திருக்கிறது

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று கொக்கரித்தவர்கள் நாட்டைப் படுகுழிக்குள் தள்ளிவிட்டுள்ளனர்.

ஆம், தமிழ் மக்கள் மீது கொடும் போர் நடத்தி இலட்சக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்ததன் காரணமாக, இலங்கை ஆட்சியாளர்கள் வன்கொடுமையாளர்கள் என்பதை உலக நாடுகள் உணர்ந்து கொண்டன.

இதற்கு மேலாக முஸ்லிம் மக்களை வஞ்சிக்கும் நோக்கில் தேவாலயத்தின் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தி அப்பாவி மக்களைக் கொன்ற ஈனர்கள், அதனைச் சாட்டாக வைத்து முஸ்லிம் இளைஞர்களைக் கைது செய்து சிறைகளில் அடைத்தனர்.

தவிர, கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகி உயிரிழந்த முஸ்லிம் மக்களை அவர்களின் இஸ்லாமிய மார்க்கத்துக்கு முரணாக எரியூட்டினர்.

இதனால் முஸ்லிம் மக்கள் பெரும் வேதனைப்பட்டனர்.

இஸ்லாமிய மார்க்கத்தின் பிரகாரம் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்தாக வேண்டும்.

ஆனால் அந்த சடங்கைச் செய்யவிடாமல் இஸ்லாமியர்களையும் மின் தகனம் செய்ய வேண்டுமென ஆட்சியாளர்கள் உத்தரவு பிறப்பிக்க, அந்த உத்தரவு இஸ்லாமிய நாடுகளைக் கடும் கோபத்துக்கு ஆளாக்கியது.

அதன் காரணமாக இலங்கைக்கு எரிபொருள் உதவியை வழங்க மத்திய கிழக்கு நாடுகள் மறுத்துவிட்டன.

உண்மை. நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்து பஞ்சப்பட்டுக் கிடக்கையில், எங்களுக்கு எரிபொருள் தந்து உதவுங்கள் என மத்திய கிழக்கு நாடுகளிடம் எரிபொருள் அமைச்சர் காஞ்சன விஜேசேகர கெஞ்சிக் கேட்டபோதிலும் அந்த நாடுகள் எந்தப் பதிலையும் வழங்காமல் மௌனம் சாதித்துள்ளன.

அந்த மௌனத்துக்குள், இஸ்லாமியர்களின் ஜனாசாவை எரியூட்டிய உங்களுக்கு எரிபொருளைத் தருவோமா என்ன? என்ற பதில் அடங்கியிருப்பதை உணர முடிகிறது.

ஆக, இலங்கை மீது உலக நாடுகள் கடும் கோபம் கொண்டுள்ளன.

இதற்கு மூலகாரணம் இலங்கை பௌத்த சிங்கள நாடு என்ற பேரினவாதமும் பௌத்த மேலாதிக்கமுமேயாகும்.

ஆக, பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீண்டெழுவதாக இருந்தால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாகத் தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும்.

அவர் தனது பதவியை இராஜினாமாச் செய்யாதவரை உலக நாடுகள் எந்த உதவியையும் இலங்கைக்கு வழங்கப்போவதில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் ஒட்டுமொத்த சிங்கள மக்களும் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி அவரைப் பதவி இறக்கம் செய்ய வேண்டும். அவ்வாறு பதவி இறக்கம் செய்தால் நாட்டின் பொருளாதாரம் ஏற்றம் பெறும் என்பது நிறுதிட்டமான உண்மை.

## எரிபொருள் நெருக்கடியால் நீர் விநியோகம் பாதிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக நீர் விநியோக பணியாளர்கள் கடமைக்கு சமுகமளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு பணியாளர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயற்பாடு தடைப்பட்டுள்ளதுடன், குடிநீர் விநியோகம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக சங்கம் எச்சரித்துள்ளது. (ம-7)

## குளவி கொட்டியதில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

பொகவந்தலாவை மேற்பிரிவு தோட்டப் பகுதியில் உள்ள 17ஆம் இலக்க வனப்பகுதியில் குளவி கொட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் மூவர் பொகவந்தலாவை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். விறகு சேகரிக்கச் சென்ற போது மரத்தில் இருந்த குளவிக்கூடு கலைந்தமையால் நால்வரும் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கடுமையான தாக்குதலுக்கு உள்ளான நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். சம்பவத்தில் பொகவந்தலாவை கீழ் பிரிவு தோட்டத்தை சேர்ந்த 50 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான சிக்கன் பத்மநாதன் என்பவரே உயிரிழந்துள்ளார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை 04 ஆம் திகதி காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ் பிரதேசத்தில்** கப்பூது, தில்லையம்பலம், யாக்கரு நூலகம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** உயிர்த்தராசங்குளம் ஆகிய இடத்திலும் வவுனியா பிரதேசத்தில் மறக்கறம்பளை-கணேசபுரம், சூடுவெந்தபுலவு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## அயல் வீட்டாரின் பிரச்சினையை தீர்க்கச் சென்ற இளைஞர் வாள்வெட்டில் உயிரிழப்பு

அயல் வீட்டில் தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையைத் தீர்க்கச் சென்ற இளைஞர்ஒருவர்வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

காலி, நெலுவ பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 20 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பலத்த காயங்களுக்குள்ளான அவர், மெதகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக உடுகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## காம்யோற்சவப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமி கோவிலின் வருடாந்த காம்யோற்சவப் பெருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆடி அமாவாசை தினத்தை தீர்த்தமாக கொண்டு 25 நாட்கள் நடைபெறும்.

இக் காம்யோற்சவப் பெருவிழா காலத்தில் காலை 7.00 மணிக்கும் மாலை 5.00 மணிக்கும் மாவை கந்தனுக்கு 108 சங்காபிஷேகம் இடம்பெறவுள்ள அதேவேளை காலை 9.30 மணிக்கும் மாலை 7.15 மணிக்கும் வசந்த மண்டப பூஜையும் இடம்பெறவுள்ளது.

மேலும் தேர்த் திருவிழாவானது எதிர்வரும் 27.07.2022 புதன்கிழமையும் மறுநாள் 28.07.2022 வியாழக்கிழமை மாவிட்டபுரம் கந்தப் பெருமானது தீர்த்த திருவிழாவும் இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நாமலின் கோரிக்கையை நிராகரித்த பங்காளிகள்


தற்போதைய அரசாங்கத்தை கவிழ்த்து விட்டு புதிய அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ முன்வைத்த யோசனையை அரசாங்கத்தில் இருந்து விலகிய பொதுஜன பெரமுனவின் கூட்டணிக் கட்சிகள் நிராகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஊடாக நாமல் ராஜபக்ச இந்த யோசனையை கூட்டணிக் கட்சிகளுக்கு முன்வைத்துள்ளதுடன் வாசுதேவ நாணயக்கார ஊடாக முன்வைக்கப்பட்ட இந்த யோசனையை கட்சிகள் நிராகரித்துள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு ராஜபக்ஷவினர் பொறுப்புக்கூற வேண்டும் என்பதால் அவர்களுடன் இணைந்து தொடர்ந்தும் அரசாங்கத்தை அமைக்க முடியாது என்பது அந்த கட்சிகளின் நிலைப்பாடாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

### உதவி செய்வதில் யாருக்கு முன்னுரிமை தருகிறோம்?



❖ சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான். (சங்.41:1) நாம் ஒவ்வொருவரும் எப்படிப்பட்ட சிந்தை கொண்டவர்களாக இருக்கிறோம்? முழுவதுமே நம்மைப் பற்றி இருக்கிறதா? நம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்தைப் பற்றி சிந்திக்கிறோமா? அதில் சுயநலம் இருக்கிறதா? என்பதெல்லாம் சுயபரிசோதனைக்கு உட்பட்டது. இதில் பெரும்பாலும் சுயநலமே வெற்றி பெறும். நம்மை விட அந்தஸ்தில் பெரியவர்களை மட்டுமே நாம் திருப்திபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறோம். அந்த அடிப்படையில் தான் செயற்படுகிறோம். இது தவறல்ல என்றாலும் சிறியவர்களுக்கு தேவையானதைப் பற்றிய சிந்தனை இல்லாமல் இருப்பதுதான் தவறு.

❖ யார் சிறியவர்கள்? வயது குறைவை இதற்கு அளவுகோலாக வைத்துக் கொள்ளக்கூடாது. வயது அதிகம் இருந்தாலும் படிப்பு, பொருளாதாரம், அறிவு, உடல் பலன், அழகு, அந்தஸ்து உட்பட பல்வேறு அம்சங்களில் குறைவுபட்டவர்கள் சிறியவர்களாக கருதப்படுவர். சற்றுத் தாழ்வான நிலையில் இருந்தாலும் அவர்களும் இறைவனின் படைப்பே நமது பெற்றோரால் [illegible] நாம் எப்படி சம அளவில் நேசிக்கிறோமே அது போலத்தான் இந்த சிறியவர்களையும் நேசிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசடிக் கும்பல்கள் தீவிரம்

## பணப்பரிமாற்றங்களின் போது ஜாக்கிரதை

(கொழும்பு)

**வங்கிகளில் பணத்தினை பெறுவதற்காக வரிசைகள் காத்திருக்கும் போது பின்னால் வரிசைகளில் காத்திருப்பது போன்று சில மோசடி கும்பல்கள் பின்தொடர்ந்து அச் சுறுத்தி பணத்தினை களவாடிச் செல்லும் சம்பவங்கள் பதிவாகி வருவதாகவும் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறும் எச்சரிக்கப்பட்டுள்ளது.**



இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடியினால் மக்கள் தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையில், பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நெருக்கடி நிலை காரணமாக பலர் வேலை வாய்ப்பினை இழந்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், பலர் மோசடி நடவடிக்கைகளிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில், இலங்கையில் ஏரிஎம் இயந்திரங்களில் பணப்பரிமாற்ற சேவைகளில் ஈடுபடும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் கட்டுநாயக்க பகுதியில் ஏரிஎம் இயந்திரத்தில் பணத்தினைப் பெற்ற ஒருவர், அச்சுறுத்தப்பட்டு பணத்தை தர மறுத்த நிலையில், சரமாரியாக கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# மாட்டு வண்டியில் செல்லும் மாணவர்கள்




(கொழும்பு)

இலங்கையில் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக பொதுப்போக்குவரத்து சேவைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட பெருமளவானோர் பெரும் பாதிப்புகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

பொதுப் போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்பட்ட நிலையில் மெதகமவின் சில பகுதிகளில் பாடசாலை மாணவ, மாணவிகள் மாட்டு வண்டியில் பாடசாலைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. (நி-6)

# 4.72 கோடி ரூபாய் பெறுமதியான தங்கத்துடன் ஒருவர் கைது



(கொழும்பு)

நான்கு கோடி ரூபாய் பெறுமதியான தங்கப்பாளங்களுடன் டுபாயில் இருந்து வந்த இலங்கையர் ஒருவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை டுபாயிலிருந்து விமானம் மூலம் நாட்டை வந்த குறித்த நபரிடமிருந்து 16 தங்கப் பாளங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அவற்றின் பெறுமதி 4 கோடியே 72 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

# தேயிலை தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயம்

(ஹற்றன்)

போதியளவு எரிபொருள் எதிர்வரும் நாட்களில் கிடைக்கப்பெறாத பட்சத்தில் நாட்டின் மாவட்டங்களில் அமைந்துள்ள தேயிலை தொழிற்சாலைகளை மூட வேண்டிய நிலை ஏற்படும் என தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் லயனல் ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 264 தனியார் தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்கள் மற்றும் அங்கத்துவம்பெறாத 250 இற்கு மேற்பட்ட தேயிலை தொழிற்சாலைகள் காணப்படுகின்றன.

எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கான நிதி செலுத்தப்பட்ட போதிலும் இது வரை தேயிலை தொழிற்சாலை பல எரிபொருளை பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தேயிலை தொழிற்றுறை குறித்து கரிசனையற்று செயற்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எரிபொருள் இன்மையினால் தேயிலைக் கொழுந்துகளை கொண்டு செல்வதில் போக்குவரத்து சிக்கல்கள் காணப்படுவதாகவும் இதன் காரணமாக நாடளாவிய ரீதியிலுள்ள 4 இலட்சம் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் மற்றும் 20 இலட்சம் பெருந்தோட்டத்துறை சார் தொழிலாளர்கள் இதன்மூலம் பாரிய சிரமங்களை எதிர் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-6)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 280 |
| உருளைக்கிழங்கு | 290 | 250 | 150 | 260 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 | 600 |
| தக்காளி | 350 | 250 | 300 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 260 | 200 | 200 | 160 |
| கோவா | 230 | 240 | 350 | 400 |
| கரட் | 200 | 350 | 350 | 400 |
| பூசணி | 200 | 200 | 200 | 240 |
| புடோல் | 160 | 150 | 180 | 300 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 400 | 480 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 200 | 240 |
| பாகற்காய் | 300 | 300 | 450 | 450 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 160 | 280 |
| கருணைக் கிழங்கு | 180 | 220 | 240 | 280 |
| பயற்றங்காய் | 300 | 250 | 250 | 250 |
| லீக்ஸ் | 220 | 200 | 180 | 250 |
| பீற்றூட் | 250 | 250 | 280 | 350 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 450 | 350 | 400 | 400 |
| போஞ்சி | 350 | 300 | 600 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 60 | 80 |
| தேசிக்காய் | 300 | 350 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 60 | 50-70 |
| இராசவள்ளி | 200 | 250 | 180 | 240 |
| வெங்காயப்பூ | 350 | 400 | 400 | 450 |
| முள்ளங்கி | 160 | 150 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 140 | -- | 140 |

# இலங்கைக்கு உதவத் தயார்

## ஓமான் தூதுவர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கைக்குத் தேவையான சகல உதவிகளையும் வழங்க தயார் என்று இலங்கைக்கான ஓமான் தூதுவர் அஹமட் அலி சஈத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் இந்த உறுதி மொழியினை வழங்கினார்.

வலுசக்தி, காஸ், எரிபொருள், முதலீடு, தொழில்வாய்ப்பு ஆகிய துறைகளில் இருதரப்பிற்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்சமயம் ஓமானில் 25 ஆயிரம் இலங்கையர்கள் பணியாற்றி வருவதாகவும் திறன் அடிப்படையிலான தொழில் வாய்ப்புக்களுக்கு கூடுதலான சந்தர்ப்பங்களை வழங்குமாறு ஜனாதிபதி ஓமான் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தக...

நேற்று மாலை தீ விபத்துச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

சங்கானை இலங்கை வங்கியின் மேற்தளத்தில் அமைந்துள்ள படப்பிடிப்பு கலையகத்தினுள் நேற்று மாலை 06.30 மணியளவில் தீவிபத்து இடம்பெற்றுள்ளது.

யாழ். மாநகர சபை தீயணைப்பு பிரிவிற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து விரைந்து வந்த யாழ். மாநகர சபை தீயணைப்பு படையினர் தீயைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

குறித்த தீ விபத்து மின்ஒழுக்கினால் ஏற்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## லிட்ரோ எரிவாயு...

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதன் முதல் கப்பல் வரும் 6ஆம் திகதி நாட்டை வந்தடைய உள்ளது. இதனால், எதிர்வரும் 7ஆம் திகதி வரை உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு வெளியிடப்படாது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 02/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1282
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 7 1 9 8 8 0
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2022.07.02 | சீட்டிழுப்பு இலக்கம் 3046
ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கங்கள் 37 41 65 71
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 02/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1152
வெற்றி எழுத்து Q | சுப்பர் இலக்க 20 | வெற்றி இலக்கங்கள் 02 20 57 73

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.07.02
சீட்டிழுப்பு இலக்கம் 113
வெற்றி இலக்கங்கள் துலாம் 44 58 59 61 துலாம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2022/07/02
சீட்டிழுப்பு இலக்கம் 4804
ஆங்கில எழுத்து F | வெல்லப்பட்ட இலக்கங்கள் 3 9 1 3 4 3
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2022.07.02
சீட்டிழுப்பு இலக்கம் - 834
ஆங்கில எழுத்து L | வெற்றி இலக்கங்கள் 07 11 54 55
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4334
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

## கால் தடக்கி...

கட்டைவேலி கரவெட்டியைச்சேர்ந்த அனுரா அனுஷாந் (வயது 34 ) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 30ஆம் திகதி எரிபொருள் நிரப்பு நிலைய்த்தில் கடமையில் இருந்த வேளை படிக்கட்டில் ஏறும்போது கால் தடக்கி விழுந்தமையினால் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சுய நினைவு இழந்திருந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தவேளை நேற்று காலை சிகிச்சை பலனின்றி உயிழந்துள்ளார். (ம-7)

## அலுவலக பஸ்...

உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் எரிபொருள் பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு பல்வேறு அமைப்புக்கள் விடுத்த கோரிக்கைகளை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

தனியார் பஸ்களுக்கு தேவையான எரிபொருளை வழங்கினால், தற்போதைய பஸ் கட்டணத்தை விட குறைந்த விலையில் அலுவலக சேவையை வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான டிப்போவினால் எரிபொருள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட போதிலும் அதற்கான பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என சுட்டிக்காட்டிய கெமுனு விஜேரத்ன, போக்குவரத்து சிரமம் காரணமாக பயணிகள் எதிர்நோக்கும் சிரமங்களை அதிகாரிகள் கவனத்தில் கொள்ளாதது வேதனையான நிலை எனவும் குறிப்பிட்டார். (ம-7)

## நெருக்கடிக்கு...

மகிந்த சமரசிங்க மற்றும் அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் செயலாளர் அன்ரனி ஜே பிளின்கென் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போது பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கை மக்களுக்கு உதவுவதற்கான தமது கடப்பாட்டை அன்ரனி ஜே பிளின்கென் மீளுறுதிப்படுத்தியுள்ளார்.

தற்போது நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில் அண்மையகாலங்களில் இந்தியாவிற்கு அடுத்ததாக அமெரிக்கா உதவிகளை வழங்கிவருவதுடன், அமெரிக்காவுடனான உயர்மட்ட சந்திப்புக்களும் இடம்பெற்றிருக்கின்றன.

குறிப்பாக அமெரிக்காவிற்கான இலங்கைத்தூதுவர் மகிந்த சமரசிங்க சில வாரங்களுக்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனைச் சந்தித்திருந்ததுடன் நாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து அவரிடம் விளக்கமளித்திருந்தார்.

அதேவேளை அமெரிக்க இராஜாங்கத்திணைக்களம் மற்றும் அமெரிக்கத்திறைசேரி ஆகியவற்றின் உயர்மட்டப் பிரதிநிதிகள் அடங்கிய குழு கடந்த வாரம் இலங்கைக்கு வருகைதந்திருந்ததுடன், நாட்டின் பொருளாதார நிலைவரம் மற்றும் இந்நெருக்கடியிலிருந்து மீட்சியடைவதற்கு அவசியமான உதவிகள் என்பன தொடர்பில் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடல்களை முன்னெடுத்தனர். (ம-7)

## ஏ-9 வீதியை மறி...

குறிப்பாக நேற்றைய தினம் அத்தியாவசிய சேவையினருக்கும் ஏற்கனவே டோக்கன் விநியோகிக்கப்பட்ட பொதுமக்களுக்குமென இரண்டு வரிசைகளில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு எரிபொருள் விநியோகம் நேற்றுக் காலை முதல் இடம்பெற்றது.

இந்நிலையில் மாலை 5:30 மணியளவில் எரிபொருள் நிறைவடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டதையடுத்து பொதுமக்களும் அத்தியாவசிய சேவைப் பிரிவினரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ். மாவட்ட பொலிஸ் நிலைய தலைமையக பொறுப்பதிகாரி வீதியின் போக்குவரத்தை சுமூகமான நிலைக்கு கொண்டுவந்தார். (ம-7,33)

## சுனாமி அலை...

அம்பலன்தொட்டவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்த நெருக்கடியிலிருந்து வெளியேற மக்கள் நம்பும் நம்பகமான மற்றும் நிலையான அரசாங்கத்தை கொண்டு வர வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இப்போது நாங்கள் இரண்டாவது அலையைத் தொடங்கிவிட்டோம். முதல் அலையை விட இரண்டாவது அலை சுனாமியாக முன்னோக்கிவரும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம் என தெரிவித்துள்ளார்.

மேலும் புதிய பிரதமர் மற்றும் புதிய அமைச்சரவையை உருவாக்குவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படுமாயின் நாட்டில் ஏற்பட்டுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கு குறுகிய காலத்தில் தீர்வு வழங்க முடியும் என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## பொலி...

மத்தியில், பொலிஸாரின் கடமைகளை இலகுவாக்கும் நோக்கில் இந்த திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

எரிபொருள்நெருக்கடி காரணமாக சில விசாரணைகள் மற்றும் களப்பணிகள் தடைப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## அம்பு...

த்து மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இதன்படி இராணுவ முகாம்களில் இருந்து எரிபொருள் விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதியும் அதற்கு இணக்கம் தெரிவித்ததாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார்.

இதேவேளை, அத்தியாவசிய உணவுப்பொருட்களை ஏற்றிச்செல்லும் லொறிகள், பொருளாதார நிலையங்களுக்கு மரக்கறிகள் மற்றும் பழங்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு இராணுவ முகாம்களில் இருந்து எரிபொருளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக செயலாளர் தெரிவித்தார்.

மேலும் இலங்கைப் போக்குவரத்து சபையின் சாலைகளூடாக தனியார் பஸ்கள், அம்புலன்ஸ்கள் மற்றும் சுற்றுலா பஸ்களுக்கான எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## விரைவில் மக்கள்...

றனர்.

இதனிடையே நாட்டில் பாரிய மக்கள் புரட்சி வெடிக்கும் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

மேலும் எரிபொருள் நெருக்கடியால் எதிர்வரும் வாரத்தில் நாடு முற்றாக முடங்கும் அபாயம் நிலவுகின்றது. (ம-7)

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1605
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2022.07.02
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,802,860/-
வெற்றி இலக்கங்கள் 03 09 11 22 | ஆங்கில எழுத்து O
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா (Shanida)

சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.07.02
சீட்டிழுப்பு இல : 3940
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,368,100/-
வெற்றி இலக்கங்கள் 20 28 32 58 | ஆங்கில எழுத்து U
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2022-07-02
வெற்றி வாரம் 3491
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 03 15 28 35 | சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,276,980/-

### 12 லக்ன

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 23 (சுப்பர் இலக்கம்) 18 23 44 75
சீட்டிழுப்பு வாரம் 955
வர்ணம் சிவப்பு
திகதி 2022.07.02 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 246,054,937/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### සංවර්ධන වාසනාව — அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 506 | திகதி 2022-07-02 | வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து S | வெற்றி இலக்கங்கள் 21 60 66 | விதி எண் 03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,130,152/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1779 | நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.07.02 | தினம் சனிக்கிழமை
C 01 16 34 72
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,853,940/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்களை கட்டுப்படுத்துவதற்கு

## விசேட அதிரடிப் படையினரை பயன்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் அருகில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் வன்முறையில் ஈடுபடுபவர்கள் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவுள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் ஏற்படும் குழப்பங்களை கட்டுப்படுத்துவதற்கு விசேட அதிரடிப் படையினரை பயன்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள்நெருக்கடி காரணமாக பணிகள் பாதிக்கப்பட்டுள்ள பொலிஸ்துறை உத்தியோகத்தர்களிற்கு 4000 துவிச்சக்கரவண்டிகளை வழங்குவது குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.(ம-7)

# திருமலை எரிபொருள் நிலையத்தில் மோதல்

(திருகோணமலை)

திருகோணமலை - லிங்க நகர் ஐ.ஓ.சிக்குச் சொந்தமான எரிபொருள் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற மோதலில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை, பாலையூற்றுப் பகுதியைச் சேர்ந்த டி.டிலூபர் (வயது-23) என்பவருக்குத் தலையில் படுகாயம் ஏற்பட்டுள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு நாட்களாக எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு நீண்டவரிசையில் நின்ற நிலையில் நேற்று ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியது எனவும், இதையடுத்து குறித்த இளைஞரை மற்றொரு இளைஞர் பொல்லால் தாக்கினார் எனவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (ம-7)

## பண்டத்தரிப்பில்

# திருட்டில் ஈடுபட்ட இருவர் கைது

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பில் பல்லசுட்டி பகுதியில் திருட்டில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் இருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

நேற்று மதியம் குறித்த சந்தேகநபர்கள் இருவரும் பல்லசுட்டியில் வைத்து முதியவர் ஒருவரின் கைப்பையை பறித்துக்கொண்டு தப்பிச் சென்றனர்.

பின்னர் அவர்கள் இருவரும் வடலியடைப்பில் உள்ள ஆலயம் ஒன்றில் திருடுவதற்கு முற்பட்டவேளை அப்பகுதி பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டனர்.

அத்துடன் முதியவரிடம் பறித்த பணம் மற்றும் தொலைபேசி உள்ளடங்கிய கைப்பையுடன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கையளிக்கப்பட்டனர்.

முதியவர் ஏற்கெனவே செய்த முறைப்பாட்டினையடுத்து அவரது பணம் மற்றும் தொலைபேசி உள்ளடங்கிய பை முதியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

24 மற்றும் 25 வயதுடைய குறித்த சந்தேகநபர்கள் இருவரும் சங்கானைப் பகுதியை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,104)

## கிளிநொச்சியில் நடத்துநரை

# தள்ளிவிழுத்திவிட்டு பணம் கொள்ளை

(முறிகண்டி)

யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாறை நோக்கிப் பயணித்த அரச பேருந்தில் பயணித்த மூவர் பேருந்தின் நடத்துநரைத் தள்ளிவிழுத்தி அவரிடமிருந்து 59 ஆயிரத்து 177 ரூபாய் பணத்தினைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்றிரவு கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மூவரும் யாழ்ப்பாணத்திலிருந்து பயணித்து உமையாள்புரம் பகுதியில் பேருந்திலிருந்து இறங்கியுள்ளனர்.

அவர்கள் இறங்குவதற்காக நடத்துநர் இடம் விட முற்பட்டபோது அவரைத் தள்ளி விழுத்தி அவரிடமிருந்த பணத்தினைப் பறித்துக் கொண்டு ஓடியுள்ளனர்.

அவர்கள் இறங்கிய இடத்தில் வேறு சிலரும் காத்திருந்ததாக பேருந்தில் பயணித்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
(ம-7,100)


**ஆடுகள் விற்பனைக்கு உண்டு**

கெற்பேலியில் பண்ணைப் பராமரிப்பில் உள்ள மறி ஆடுகள், கிடாய் ஆடுகள் சில்லறையாக விற்பனைக்கு உண்டு.
தேவை, ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் :
**077 116 7585**
(C-4566)

**காணி விற்பனைக்கு**

யாழ். கச்சேரிக்கு அண்மையாக பேரின்பநாயகம் வீதியில் 3 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு
**076 675 7518**
(12036)

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம் வீதியில் கெற்றப்போல் சந்திக்கு அருகில் 2 பரப்பும் 2 குழியும் உள்ள காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு
(12045)
**077 711 1870**

**IELTS CLASSES**

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
**IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH**
- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை)A1 UK Exam, IELTS — புதிய பிரிவுகள் ஆரம்பம்
(11717)
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.
TP: 077 780 3970, 074 007 1970

**நீர்க்கசிவு** பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு
**Water Proofing**

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களிடம் மட்டும் பெற்றுக் கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
- கட்டடங்களில் ஏற்படும் வெடிப்புக்களை உத்தரவாதத்துடன் சீர்செய்து கொள்ள இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனப் பொருட்கள் மற்றும் கட்டடக் கம்பிகளில் ஏற்பட்ட துருப்பிடித்தலை அகற்றும் இரசாயனப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

போலி இரசாயனத்துடன், போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து வேலை கேட்பார்கள். ஏமாற வேண்டாம்.

உலகத்தரம்மிக்கது
வட மாகாணத்தில் முதன் முதலில் அறிமுகம் செய்தவர்கள்
(12048)

FINEX இரசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.
**North and East Engineering**
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000

**உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு**

**அன்பு வாசகர்களே!**

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

**தொடர்புகளுக்கு:**

தொலைபேசி:
**076 097 3127**
**021 221 7603**
Viber: 076 636 3378
E.mail:
valampurii@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.